பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | சித்திரை 13 | வியாழக்கிழமை | 27.04.2023 | கதிர் 168

# வாக்களிப்பைத் தவிர்க்க மஹிந்த ராஜபக்ஷ முடிவு

## ஐ.எம்.எவ். ஒப்பந்த விவகாரத்தில் தீடீர் திருப்பம்



சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் மீது நாடாளுமன்றத்தில் வாக்களிப்பு நடக்கும்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சில மொட்டுகட்சிநாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று நம்பகமாகத் தெரியவருகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் மீதான விவாதம் புதன்கிழமை தொடங்கியது. அதன் மீது விசேட உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கினார். நாணய நிதியத்திடம் செல்வதைத் தவிர இலங்கைக்கு வேறு வழி எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாயண நிதியத்திடமிருந்து ஏற்கனவே 16 தடவைகள் கடன் பெற்றுக் குழப்பியதைப் போன்று இந்தத் தடவையும் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் உள்ள அனைவருமே ஆதரிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாணம் சுகாதாரத் தொண்டர்கள் பலர் தமது நிரந்தர நியமனம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இழுபறிப்படுகின்றது.

போர்க் காலங்களில் கடும் துன்பங்களுக்கு மத்தியில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களுக்கு நிரதர நியமனம்வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டபோது, சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றாத பலரையும் அதற்குள் உள்வாங்குவதற்கு வடக்கு மாகாண சபை அதிகாரிகள் செய்த திருகுதாளங்கள், தில்லாலங்கடிகளே இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் இழுபறிப்படுவதற்குக் காரணம்.

அப்படித் தொண்டர்களாக இல்லாதவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாது என்று ஒரு தரப்பு நிற்க, அப்படியானால் அந்தப் பட்டியலில் ஒருவருக்குமே நியமனம் கொடுக்கமுடியாது என்று மற்றத் தரப்பு சட்டம் பேச என இந்தப் பிரச்சினை இழுபட்டு இன்று நீதிமன்றத்திற்கு வந்துவிட்டது. இனியாவது அதற்கொரு விடிவு கிடைக்கிறதா பார்ப்போம்!

நான் இன்று சொல்ல வந்தது இந்த வழக்குப் பற்றியதல்ல, அதுபோன்றே அதிகாரிகளின் தில்லாலங்கடி வேலை ஒன்றுடன் தொடர்புடைய மற்றொரு விடயம் பற் றியது.

வடக்கு மாகாணத்தில் இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தில் பணியாற்றியவர்களில் ஒருவர் கே.தெய்வேந்திரம். மாகாணத்தில் பணியாற்றிய காலத்தில் பல சர்ச்சைகளுக்குள் அகப்பட்டவர். ☞2

## இந்திய ரூபாயை சுற்றுலாவிகள் இனி பயன்படுத்தலாம்

இலங்கைக்குவருகைதரும்இந்தியசுற்றுலாப் பயணிகளால் இனி இந்திய ரூபாவை நேரடியாகப் பயன்படுத்த முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கலா நிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியவணிகமற்றும்கைத்தொழில்சம்மேளனத்தினால் ‘இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்காலப் பயணம்’ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வில் புதன்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மத்திய வங்கியினால் இந்திய ரூபா பெயரிடப்பட்ட நாணய அலகாக மாற்றப்படுவதால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக கொடுக்கல், வாங்கல்கள் மாத்திரமன்றி இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலா பயணிகளும் இந்திய ரூபாவை பயன்படுத்த முடியும்;.

இந்தியரூபாவின்பயன்பாடுஇலங்கையின் தற்போதைய நெருக்கடியான நிலைமைகளை சுமுகமாக்குவதற்கும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

## மகிந்தவின் 40 வருட அரசியலுக்கு எதிரானது ஐ.எம்.எவ். உடன்பாடு

### சரித்த ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 40 வருட அரசியல் அனுபவத்திற்கு எதிரான உடன்பாடேசபையில்சமர்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி.சரித்த ஹேரத், இன்றைய தலைவர்களை சர்வதேச நாயண நிதியம் சிறுபிள்ளைகளாக மாற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடந்த விவாத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டின்போது அனைத்து பகுதிகளிலும் ஸ்ரக்ஷரல் பெஞ்ச மார்க் (structural bench-mark) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் சர்வதேச நாணய நிதியத்திடத்தில் சென்றபோது இவ்விதமாக எவையும் குறிப்பிட ப்பட்டிருக்கவில்லை.

ஸ்ரக் ரல் பெஞ்ச மார்க் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றவென்று பலருக்கு தெரிந்திருக்கவாய்ப்பில்லை. மிகவும் சுலபமான முன்னுதாரணத்தினைக் கூறுவதாக இருந்தால் வீடுகளில் சிறு பிள்ளைகள் விளையாடும்போதுஅவர்கள்வெளியில் செல்லாதிருப்பதற்காகபோடும் தடைகளைப்போன்றதுதான் அந்த விடயமாகும்.

சர்வதேச நாணய ☞2

## பாடசாலைகளில் பகல் உணவு நிறுத்தப்படக்கூடிய அபாயம்

### நாடாளுமன்றில் அனுரகுமார எச்சரிக்கை



உணவு விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவுகளை முறையாக வழங்காமையா ல் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் பகல் உணவு வேலைத் திட்டம் நிறுத்தப்படும் அபயாம் ஏற்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது பாடசாலைகளுக்குப் பகல் உணவு விநி யோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உணவு விநியோகஸ்தர்களுக்குத் தேவையான நிதி வழங்காமையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இதனால் பாடசாலைகளுக்கான உணவுவிநியோகம்நிறுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர். உணவு வழங்கப்படாது என்று அரசு தீர்மானிக்காவிட்டாலும் தானகவே அது நிறுத்தப்படும் அபாயம் நிலவுகின்றது.

அதேவேளை, 4 ஆயிரத்து 800 பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. நேர்முகப் பரீட்சையை நடத்தி அவற்றுக்கான அதிபர் நியமனங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டபோதும் அது தொடர்பான நடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் சில கேள்விகளை அரசிடம் எழுப்புகின்றோம். பாடசாலைகளுக்கான உணவு விநியோகத்தை முறையாக முன்னெடுக்க அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? அதிபர் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளின் அதிபர் நியமனங்களை எப்போது செய்யப் போகின்றீர்கள்? - என்றார். (02)

## நெடுந்தீவுக் கொலைகளில் படைகளுக்கு தொடர்புண்டா என ஆராயப்படவேண்டும்

### சிறிதரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து



நெடுந்தீவில் 5 முதியவர்கள் கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் கடற்படைக்கும் இராணுவத்துக்கும் உள்ள தொடர்புகள் குறித்து ஆராயப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன் கிழமை நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டைஅமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்நாடாளுமன்றஉறுப்பினர் சிறிதரன். அவர் மேலும் தெரிவித்ததாவது:

22.04.2023 இல் நெடுந்தீவு மண்ணில்இடம்பெற்றஒருபெரும் மனிதப் படுகொலை தொடர்பில் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

5 வயோதிபர்களான திருமதி நாகசுந்தரிகார்த்திகேசு(83வயது). இவரது கணவன் குமுதினிப் படகில்வைத்துகடற்படையினரால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டவர். நாகநாதி பாலசிங்கம் (82 வயது), அவரின் மனைவி-யான கண்மணிப்பிள்ளை பாலசிங்கம் (76 வயது), நாகரத்தினம் வேலாயுதபிள்ளை (78 வயது), சுப்பிரமணியம் மகாதேவா (74 வயது) ஆகியோர் ஒரு நபரால் கடற்படையினரின் முகாமுக்கு அருகில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்கள். அதேநேரம் 100 வயதை எட்டிய மூதாட்டி பூரணம் கனகர் படுகாயத்தோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இங்கே கடற்படை முகாமுள்ளது. அதன் அருகோடு நெடுந்தீவு மண்ணில் யாரும் பார்க்க முடியாத ஒரு பிரதேசத்தில், உடனடி நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு பிரதேசத்தில் மிக மோசமாக இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இது இந்த ஆண்டிலே நடந்த ☞2

## ஊழியர் சேமலாப நிதியை எடுக்க அனுமதிக்க முடியாது

### எலபனட நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

ஊழியர்சேமலாபமற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியில் கைவைப்பதைஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையின் பின்னர் ஆரம்பமான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி இங்கு வருகை தந்து, ஊழியர் சேமலாப நிதியினையும், ஊழியர் நம்பிக்கை நிதியையும் பெற்றுக்கொள்ளவுள்ளமையை நியாயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளார். அதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிஎன்பனஆந்தந்தமக்களுக்குச்சொந்தமானது. அவர்களின் உழைப்பினால்உருவாகியது. அதனை பயன்படுத்துவதற்கு அரசாங்கம்நடவடிக்கைகளை எடுப்பதை எற்றுக்கொள்ளவே முடியாது.

ஜனாதிபதிமற்றும்அமைச்சர்களுக்குஊழியர்நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி ஆகியன இருக்கும் என்று நான் கருதவில்லை. ஆகவே குறித்த நிதியை ☞2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஊழல் குறித்து முறைப்பாடு

எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட அனர்த்தம்சம்பந்தமான இழப்பீட்டைப்பெற்றுக் கொள்வதற்குசாமரஎன்பவருக்கு250மில்லியன் ரூபா இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜதாச ராஜபக் அறிவித்துள்ள நிலையில் அதுதொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு முறையிடப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பினர் புதன்கிழமை பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்று இந்த முறைப்பாட்டைச் செய்ததோடு, உரிய விசாரணைகளுக்கான வலியுறுத்தல்களையும் மேற்கொண்டனர்.

அந்த அமைப்பின் பிரதிநிதிகளான சட்டத்தரணி சுனில் வட்டகல வசந்த சமரசிங்க, உள்ளிட்டவர்களே இந்த முறைப்பாட்டைச் செய்தவர்களாவர்.

நாட்டு மக்களின் மனோநிலையை இன்னமும் ஆட்சியாளர்கள் புரியவில்லை. ஊழல், மோசடிகள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்காது காலத்தினைக் கடத்துவதற்கே எண்ணுகின்றர்கள். இதற்கு அனுமதி அளிக்க முடியாது என்றார் அவர்.

சிங்கப்பூரில் வழக்குத் தொடுப்பதற்கு அனுமதி அளித்தது யார்? அதற்கான நிதிச் செலவினை செய்யப்போவது யார்? என்றும் அவர் கேள்விகளைத் தொடுத்தார்.

## என்னைப் பின்தொடருங்கள் என்றழைத்தார் ரணில் கனவுகாணவேண்டாமெனக் கூறி மறுதலித்த சஜித்



நான் சொல்வதையே செய்வேன். ஆகவே நான் முன்னே நடக்கின்றேன். எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி என் பின்னால் தொடரலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வைத்து இன்று நேரடியாக அழைத்தார். அதனை அவ்விடத்திலேயே மறுதலித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவ்வாற நிகழ்வொன்றுஎச்சந்தர்ப்பத்திலும் நிகழப்போவதில்லை, நீங்கள் வீணாகக் கனவு காணாதீர்கள்என்றுகுறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையுடன் விவாதம் தொடங்கியது. உரை நிறைவடைந்தவுடன் ஜனாதிபதி ரணில் வெளியேறுவதற்குத்தயாராகினார். அப்போது, எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு விதிக்கப்பட்டிருந்த நிலையி-யற் கட்டளை 27இன் 2கீழ் கேள்விகளையும்கேட்டுவிட்டு செல்லுங்கள் என்று ஜனாதிபதியைக்கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஜனாதிபதி, எனது இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் சபையில் இருக்கின்றனர். ☞2

## ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை சட்டமாக்க முயற்சியா?

### சம்பிக்க ரணவக்க நாடாளுமன்றில் கேள்வி



சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை சட்டமாக்குவதற்கு முயற்சிக்கின்றீர்களா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பினார்.

சர்வதேச நாணய ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ''கடிதங்கள்'' எழுதுவதில் ஆள் விண்ணன் என்று மாகாண சபைக்குள் பெயரெடுத்தவர். இவர் செயலாளராக இருந்தபோது, வடக்கு மாகாண சபையில் தொண்டராசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவியபோது அதிபர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பணம் இன்றி அல்லது மிககச் சொற்பப்பணத்திற்கு ஆசிரியர் சேவையை வழங்கியவர்கள் தொண்டராசிரியர்கள். காலத்திற்குக் காலம் இவர்கள் பின்னர் ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள். அப்படி தொண்டராசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும் நியமனம் ஒன்றில் வடக்கு மாகாணத்தின் எந்தப் பாடசாலையிலும் கல்விகற்பிக்காத ஒருவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது அப்போதே பெரும் சர்ச்சையாகி இருந்தது. விசாரணைகளும் நடந்திருந்தன. ஆனால் அப்போது எப்படியோ சமாளிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் செயலாளர் தெய்வேந்திரம் அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவரது காலத்திலேயே தொண்டர் ஆசிரியராகவே இல்லாதவருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. அந்த ஆசிரியரும் ஓய்வு வயதினையடைந்தபோதும் அவரது நியமனமே இன்னும் இழுபறியில் கிடக்கிறது. இதற்கிடையில் தெய்வேந்திரம் எப்போது ஓய்வு பெறுவார் என்று காத்திருந்தது போல ஓடிச் சென்று அவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் யாரோ ஒரு முறைப்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.

இவர் செயலாளராக இருந்தபோது வழங்கப்பட்ட முறையற்ற நியமனம் (அதுதான் அந்தத் தொண்டர் ஆசிரியர் நியமனம்) தொடர்பில் திணைக்கள ரீதியாக நடவடிக்கை எடுக்க வில்லை அது குறித்து விசாரிக்கவேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் கேட்கப்பட்டிருக்கிறது. இப்போது சீ.ஐ.டி. அந்தவிசாரணையைத் தொடங்கியுள்ளது. பிரச்சினைக்குரிய தொண்டர் ஆசிரியரின் நியமனம் தொடர்பான சகல ஆவணங்கள், ஆதாரங்கள், விவரங்களை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் கோரியிருந்தது சீ.ஐ.டி.

பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலக நிர்வாக அலுவலர் கடந்த வாரம் கொழும்பிற்குச் சென்று சீ.ஐ.டி. கேட்ட சகல ஆவணங்களையும் கையளித்துவிட்டுத் திரும்பியுள்ளார். விரைவில் இந்த விடயம் அக்குவேறு ஆணிவேறாக வெளியே வரும் என்கிறார்கள். அப்படி வருகின்றதோ இல்லையோ ஒன்று மட்டும் நிச்சயம். பதவியில் இருக்கும்போது தில்லாலங்கடி வேலைகளைச் செய்துவிட்டுத் தப்பிவிட முடியும் என்று மட்டும் இனி ஒருபோதும் அதிகாரிகள் நிம்மதியாக இருக்க முடியாது என்பதுதான்.

- இடி மின்னல் -

## வாக்களிப்பைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒப்பந்தத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவற்றை 6 மாதங்களுக்கு ஒரு தடவை நிதிய அதிகாரிகளுடன் நடக்கும் மீளாய்வுக் கூட்டங்களில் தெரியப்படுத்திச் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் அவரது அழைப்பை சுதந்திர மக்கள் சபை, ஜேவிபி, நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்பன்பில உள்ளிட்ட எதிர்த் தரப்பினர் நிராகரித்து உரையாற்றினர். ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பு மே 5 இடம்பெறவுள்ளது.

இந்த நிலையிலேயே இந்த ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று முடிவெடுத்துள்ளது. கட்சியின் செயலாளர் சாகர காரியவாசமும் அவர்களுள் ஒருவர் என்று தெரிகிறது.

ஒப்பந்தத்தில் உள்ள நாட்டுக்குப் பாதகமான அம்சங்கள் பலவற்றையும் சுட்டிக்காட்டும் இந்தக் குழுவினர், இதன் காரணமாக ஒப்பந்தத்தை ஆதரிப்பதில்லை என்கிற முடிவுக்கு வந்துள்ளனர்.

## மகிந்தவின் 40 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிதியம் இந்தத் தலைவர்களை சிறுபிள்ளைகளாக மாற்றியுள்ளனர். இவ்விதமான நிலையில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகளை வாசித்துப் பார்த்த எவரும் அதற்கு இணங்க மாட்டார்கள்.

இந்த உடன்பாட்டை வாசிக்காதவர்களே கைகளைத் தட்டி ஆரவாரத்துன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஆதரவளிப்பதாக வாக்களிக்கப் போகின்றனர்.

அந்த அடிப்படையில் சுதந்திர மக்கள் சபையினால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே நாம் இந்த உடன்பாட்டுக்கு எதிராகவே வாக்களிக்கவுள்ளோம் என்றார்.

## நெடுந்தீவுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மிகப்பெரிய படுகொலை. இது நியாயமாக, நீதியாக விசாரிக்கப்பட வேண்டும். இதில் கடற்படைக்கும் இராணுவத்துக்கும் உள்ள தொடர்புகளும் ஆராயப்பட வேண்டும்.

இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதனைத் தான் இந்தச் சம்பவமும் உறுதிப்படுத்துகின்றது.

இதேவேளை கிளிநொச்சி கௌதாரி முனையில் இருக்கின்ற மண்ணை அகழ்வதற்காக அஜித்தென்னக்கோன் என்பவருக்கு வடக்குமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா விசேடமான உத்தரவின் பேரில், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த மண்ணை அகழக்கூடாது என்ற கட்டளை இருக்கும் நிலையில் - இன்னும் தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் பூநகரி பிரதேச செயலாளரை வைத்து அவருக்கூடாக அந்த மண்ணை அகழ்ந்து விற்பனை செய்வதற்கான முயற்சியில் வடக்கு ஆளுநர் ஈடுபட்டுள்ளார். இந்த விடயத்தையும் இந்தச் சபையில் பதிவு செய்கின்றேன்.

மிக முக்கியமாக ஜீவன் தியாகராஜாவின் நிதி நடவடிக்கைகள், அவர் செய்கின்ற ஊழல் நடவடிக்கைகள், அரச நடவடிக்கை துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் இந்தச் சபை கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (02)

## ஊழியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றுக்காக ரணில் விக்கிரமசிங்க என்ன செய்தார் என்று கேள்வி எழுப்பினார்.

## என்னைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உங்கள் கேள்விகளுக்கு அவர்கள் பதில் வழங்குவார்கள். அத்துடன் நான் சொல்வதைத்தான் செய்வேன். அதனால் நீங்களும் எங்களுடன் சேர்ந்து நடக்க முன்வாருங்கள் என்று தெரிவித்து ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறிச் செல்ல முனைந்தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்விகளை தொடுப்பதாக கூறி, ஜனாதிபதியின் உரையின்போது, ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதையே சிபார்சு செய்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிரணியில் இருந்தபோதும் அதனையே கூறினார். அத்துடன் அப்போதைய நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை, சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை நாடாளுமன்றத்தில் சமர்பிக்குமாறும் வலியுறுத்தினார். ஆனால் அதனை ஆளும்தரப்பில் இருந்தவர்கள் எதிர்த்தார்கள். தற்போது எதிர்த்த விடயங்களை எல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறவும் கையுயர்த்தி ஆதரவளிக்கின்றார்கள். அவர்களுக்கு எதுவும் விளங்கவில்லை. அடிப்படை அறிவற்றவர்கள் என்று விமர்சித்தார்.

இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சஜித் பிரேமதாசவின் உரைக்கு இடையூறு விளைவித்தனர். குறிப்பாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடுமையாக எதிர்ப்புக்களை வெளியிட்டார். ஜனாதிபதியின் உரை முடிந்துவிட்டது. அதனைத்தொடர்ந்து நிலையியற்கட்டளைகளுக்கு அமைவாக சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் கேள்விகளைக் கேட்க முடியுமே தவிரவும் உரையாற்ற முடியாது. அவர் கூறும் எல்லாவற்றையும் எம்மால் கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. உடனடியாக எதிர்க்கட்சித்தலைவரை அமரச் செய்யுங்கள் என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தனது உரையைத் தொடர்வதற்காக ஆளும்தரப்பினரை அமருமாறு சஜித்பிரேமதாச தொடர்ச்சியாக கூறினார். அத்துடன், ஜனாதிபதியின் புன்னகை உங்களுக்கு பதிலளித்துவிட்டது. நீங்கள் ஜனாதிபதியுடன் பணியாற்றுவதற்கு முன்னதாக நாம் அவருடன் பணியாற்றியுள்ளோம். ஆகவே அவரைப்பற்றி எமக்கு நன்றாகத் தெரியும் என்றார்.

இதன்போது எழுந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நான் செய்வதைத்தான் சொல்வேவன், சொல்வதைத் தான் செய்வேன் என்கிற அர்த்தப்படும் வகையில் ஆங்கிலச் சொற்றொடர் ஒன்றை உதித்தித்துவிட்ட - நான் முன்னே செல்கின்றேன். எதிர்க்கட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியினர் என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள் என்று நகைச்சுவையாக பதிலளித்தார்.

அக்கூற்றுக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி உங்களின் பின்னால் வரும் என்று தவறாக கணிக்காதீர்கள். எக்காலத்திலும் அது நடக்கப்போவதில்லை. வீணாக கனவுகாணாதீர்கள். நாட்டைக் காட்டிக் கொடுப்பவரின் பின்னால் நாம் என்றும் செல்ல மாட்டோம் என்றார்.

## ஐ.எம்.எவ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை ஆற்றும்போது குறுக்கீடு செய்து கேள்வி எழுப்பினார் அவர். அவரது கேள்வியில் தெரிவிக்கப்பட்டதாவது:

அரசமைப்புச் சட்டத்தின் 157ஆவது பிரிவுக்கு அமைவாக இரு நாடுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்படுகின்ற உடன்பாடுகளைச் சட்டமாக்குவதற்கு முடியும். அதுபோன்று சர்வதேச நாணயநிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டையும் சட்டமாக்குவதற்கு முனைகின்றீர்களா?

சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்பாட்டை வெறுமனே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அடிக்கடி சட்டங்களை இயற்ற வேண்டி ஏற்படும். ஆகவே, அதுதொடர்பில் தெளிவுபடுத்த முடியுமா - என்றார்

அதற்குப் பதலிளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த உடன்பாடானது வேறொரு நாட்டுடன் மேற்கொள்ளப்பட்டதல்ல. சர்வதேச நாணயநிதியத்துடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த உடன்பாடு தொடர்பில் சட்டங்களை நிறைவேற்றவேண்டியுள்ளது. அச்சட்டங்களை தேவையான நேரத்தில் கொண்டுவருவோம். எவ்வாறாயினும், சட்டத்தினை நிறைவேற்றுவதற்கு முன்னதாக நாம் எதிர்க்கட்சியுடன் கலந்துரையாடி இறுதி முடிவினை எட்டுவோம்.

குறித்த விடயம் சம்பந்தமாக திறைசேரிக்கும் அறிவுரை வழங்கியுள்ளேன். அதற்கான பணிகளைத் தொடங்குமாறு கோரியுள்ளேன் - என்றார்.











இந்தியா-சீனா-தாய்லாந்-டுபாய்
போன்ற நாடுகளில் இருந்து வியாபார நோக்கத்திற்காக பொருட்களை இலங்கைக்கு விரைவாகவும் குறைந்த கட்டணத்திலும் இறக்குமதி செய்து தரப்படும்
உங்கள் பொருட்கள் விபரங்களையும் நிறையையும் வட்ஸ்சப்(whatsup) செய்வதன் ஊடாக கட்டண விபரங்களை அறிய முடியும்
0753305500

# நட்டத்தை மதிப்பிடமுன் நியூ டைமன் கப்பலை வெளியேற்ற ஜயநாத் கொலம்பகே ஆலோசனை

## நீதியமைச்சர் விஜயதாஸ சாடல்

நியூ டைமன் கப்பல் தீ விபத்தால்கடல்வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்யாமல் நாட்டின் கடற்பரப்பில் இருந்து கப்பலை வெளியேற்றவேண்டாம்என சட்டமாதிபர் திணைக்களம் மற்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ள நிலையில் கப்பலை வெளியேற்றுமாறு வெளிவிவகாரத்துறைஅமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மின்னஞ்சல் செய்தி ஊடாக அறிவித்துள்ளமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுஎன நீதி,சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இருபத்தேழு,இரண்டின் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றுகையில் -

நாட்டின் கிழக்கு கடற்பரப்பில் கடந்த 2020.09.09 ஆம்திகதிவிபத்துக்குஉள்ளான நியூ டைமன் கப்பல் விவகாரம் பிறிதொரு பேசுபொருளாக காணப்படுகிறது.

இந்த கப்பல் விபத்தால் சமுத்திர வளங்கள், தீ பரவலை கட்டுப்படுத்த நாரா நிறுவனம் செலவு செய்த நிதி தொகை,மீனவ சமூகத்துக்கு தொழிற்துறையால் ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றுக்கு 250 மில்லியன்ரூபாநட்டஈடுகோரி குறித்தநிறுவனத்துக்குஎதிராக கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நியூ டைமன் கப்பல் விவகாரத்தில் யாருக்கு அழைப்பானைவிடுப்பதுஎன்பது பிரதான பிரச்சினையாக உள்ளது.நாட்டின்கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன் கப்பலால் ஏற் பட்ட பாதிப்புக்கு நட்டஈடு கோருவதற்கான மதிப்பீட்டை உறுதிப்படுத்த முன் நாட்டின் பரப்பில் இருந்து வெளியேற கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என சட்டமாதிபர் திணைக்களம் பலமுறை பொறுப்பான தரப்பினருக்கு அறிவிப்பு விடுத்துள்ளது. இருப்பினும் சட்டமாதிபர் திணைக்களத்தின்அறிவிப்பை பொருட்படுத்தாமல் கப்பல் வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்த கப்பலை வெளியேற்றுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார் எனக் குறிப்பிடுகிறது. இவ்விடயம் தொடர்பில் அவரிடம் பலமுறை பேச்சில் ஈடுபட்டேன்.நட்டஈடு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீர்மானங்களை முழுமையாக செயற்படுத்துமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.கப்பலைவெளியேற்றுமாறு அவர் குறிப்பிட்டார் என எந்த இடத்திலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

கடற்பரப்பில் இருந்து கப்பலை வெளியேற்றுமாறு வெளிவிவகாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மின்னஞ்சல் ஊடாக பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்துள்ளார். இதனை கடல் வளங்கள்அபிவிருத்திஅதிகார சபையின் முன்னாள் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார். வெளிவிவகாரத்துறைஅமைச்சின் செயலாளர் எவ்வாறு கப்பல் விவகாரத்தில் தலையிட முடியும்என்பது சந்தேகத்துக்குரியது. இவ்விடயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மறுபுறம்ஸ்ரீலங்காபொது ஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கடல் வளங்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா கப்பலை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்குமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதற்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். தற்போது விடயங்கள் வெளிப்படுகின்றன.



நாட்டின் கடற்பரப்பில் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் மற்றும் நியூ டைமன் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தை கட்டுப்படுத்த இந்திய கடற்படையின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது.வழங்கிய ஒத்துழைப்புக்கு இந்திய கடற்படை 895 மில்லியன் ரூபா கோரியுள்ளது.இந்த நிதியை வழங்க வேண்டும். ஆகவே இருகப்பல்களையும் அடிப்படையாக கொண்டு தாக்கல் செய்துள்ள வழக்குகளில் இந்த நிதியையும் உள்ளடக்குமாறு சட்டமாதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். - என்றார்.

# இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்

## 300 இற்கும் மேற்பட்ட உலகத்தமிழர்கள் பிரிட்டன் அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஏப்.27

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரதமர் ரிஷி சுனாக் தலைமையிலான பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவவேண்டும் என்றும் உலகளாவிய ரீதியில் வாழும் 300 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் கையெழுத்துடன் கூடிய மனு வின் ஊடாக இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும்வழக்குத்தொடரலுக்கான சர்வதேச நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இடம்பெற்றது என்றஉண்மையைபிரதமர் ரிஷி சுனாக் தலைமையிலான பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென வலியுறுத்தி-சேஞ்ச்ஓர்கனைசேன் - என்ற அமைப்பின் இணையப்பக்கத்தின் ஊடாக இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்குத்தொடரலுக்கான சர்வதேச நிலையத்தால் ஆரம் பிக்கப்பட்டுள்ளஒன்லைன்மனுவில் இதுவரை சுமார் 300 இற்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர்.

அதன்படி அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமுக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைதொடர்பில் சர்வதேச சமூகமும் ஊடகங்களும் அமைதிகாத்துவருகின்றமை எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இனப்படுகொலை இடம்பெற்று 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அந்த உண்மையை ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது குரலற்றமக்களுக்குநீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கோ சர்வதேச சமூகத்தால் இது வரையில் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

அதேபோன்று இலங்கைக்கு வெளியே பெரும்பான்மையான தமிழர்களின் - இல்லமாக - பிரிட்டன் திகழ்கின்ற போதிலும், இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் பிரிட்டனால் முன்னெடுக்கப்படாமை கவலையளிக்கின்றது.

ஐக்கியநாடுகள்சபையால் கடந்த 1948 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பான பிரகடனத்தின் வரைவிலக்கணம், சுதந்திர இலங்கையில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற சம்பவங்களுடன் பொருந்துகின்றது.

அதுமாத்திரமன்றி இலங்கையில் இனப்படுகொலை இடம் பெற்றது என்ற கருத்தை நிரூபிப்பதற்கான பலசான்றாதாரங்கள் காணப்படுகின்ற போதிலும், இது தொடர்பாக இன்னமும் விசாரணைகள்மேற்கொள்ளப்படவில்லை.

அதுமாத்திரமன்றி ஐக்கிய நாடுகள் சபை யின் பக்கச்சார்பான விசாரணைப்பொறிமுறையின் ஊடாக இனப்படுகொலை தொடர்பான ஆதாரங்கள் திரட்டப்படாமல், வெறுமனே போர்க்குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் மாத்திரமே திரட்டப்படுகின்றன.

இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்குஅமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து இணையனுசரணை வழங்கியதன் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குபிரிட்டன் மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

அதேவேளை தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கங்களால் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் உடலியல் ரீதியானதும், கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியானதுமான இனப்படுகொலையை அனுபவித்தார்கள் - அனுபவித்துவருகின்றார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இவ்வாறானதொரு பின்னணியில் இந்த விவகாரம் தொடர்பில் உடனடி நடவடிக்கை அவசியமென நாமனைவரும் கூட்டாக வலியுறுத்துகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதைஏற்றுக்கொள்வதற்கு தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவுங்கள் என்று அம்மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆணைக்குழுக்களின் அவலம்

அரச நிர்வாகத் துறைகளில் அரசியல் தலையீடுகள் குறிப்பாக ஆளும் கட்சியின் தலையீடும் அதிகாரிகள் அதற்குச் சார்பாக நடக்க முற்படுவதும் தடுக்கப்படவேண்டும் என்பதற்காகவே சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. நாட்டின் பொது நிர்வாகம் ஆட்சியில் உள்ள கட்சியின் சார்பாகவன்றி, அரசமைப்பின்படி அனைவருக்கும் நீதியாகவும் நேர்மையாகவும் நடக்கவேண்டும் என்பதே இந்தச் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டதன் நோக்கம்.

இலங்கையில் அரசுத் தலைவர் முற்றிலும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்த நிலையில் இதுபோன்ற அரச அதிகாரிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், போன்றவற்றை ஒரு தனிநபர் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் கொண்டு செல்ல இந்த ஆணைக்குழுக்கள் தேவைப்பட்டன. தேர்தல்கள் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் சுயாதீனத்தையும் பாதுகாக்கவும் ஆணைக்குழுக்கள் தேவைப்பட்டன.

ரணில் விக்கிரமசிங்கவால் அரசுத் தலைவர் பதவியைத் தேர்தல் மூலம் கைப்பற்றவே முடியாத ஒரு நிலை இருந்தபோது – அவர் நாடாளுமன்றத்தில் மட்டுமே உயர் பதவிகளை எட்ட முடிந்தபோது – அரசுத் தலைவர்களின் தன்னதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், மக்களாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் இந்த ஆணைக்குழுக்கள் அவசியம் என்று அவர் வலியுறுத்தி வந்தார். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் இந்த ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்குவதற்கான வழி வகைகளையும் ஏற்படுத்துவதில் முன்னின்றார்.

ஆனால், இப்போது பின்வழியாகவேனும் அவர் ஜனாதிபதியாகிவிட்டார். அதிகாரத்தில் அமர்ந்துவிட்டார். அதனால் இப்போது அவருக்கு ஆணைக்குழுக்கள் சுயாதீனம் மிக்கவையாக இருப்பது இடைஞ்சலாக இருக்கின்றதுபோலும். முதலில் தேர்தல்கள் ஆணைக்குழுவை, நிதியை முடக்கியதன் மூலம் செல்லாக்காசாக்கினார். இப்போது அவரது அமைச்சரான டிரான் அலஸ் காவல்துறை ஆணைக்குழுவை அத்தகைய நிலையை நோக்கித் தள்ளிவருகின்றார். நல்லவேளையாக அமைச்சரின் இடமாற்ற உத்தரவுகளை அப்படியே ஏற்றுக்கொண்டதன் மூலம் ஆணைக்குழுக்கள் தொடர்பான சர்ச்சை மீண்டும் எழாமல் காவல்துறை ஆணைக்குழு சமாளித்துக்கொண்டது.

காவல்துறை அதிகாரிகளின் நியமனம் மற்றும் இடமாற்றங்களை காவல்துறை ஆணைக்குழுதான் மேற்கொள்கிறது. ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டத்திலிருந்து அதுதான் வழமை. ஆனால் திடீரென்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் 9 மூத்த பிரதிப் காவல் மா அதிபர்களை இடம் மாற்றம் செய்து கடிதங்கள் அனுப்பினார். அதில் ஒருவரான அஜித் ரோகன, அந்த இடமாற்ற உத்தரவை ஏற்க மறுத்து இது அரசியல் பழிவாங்கல் என்று குற்றஞ்சாட்டினார். ஆணைக்குழுவினாலன்றி அமைச்சரால் தனக்கு இடமாற்றம் வழங்கப்படமுடியாது என்று வாதிட்டார். உடனே ஆணைக்குழுவின் அனுமதி இந்த இடமாற்றங்களுக்குக் கிடைத்ததாக அமைச்சர் ஒரு விளக்கம் கொடுத்தார். ஆனால், இந்த விவகாரத்தை ஆணைக்குழுவே நேரடியாகக் கையாண்டிருக்கவேண்டும். இடமாற்றங்களுக்கு ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவை உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் புதன்கிழமை அவசரமாகக் கூடிய காவல்துறை ஆணைக்குழு அந்தக் கூட்டத்தில்தான் இந்த இடமாற்றங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் அமைச்சர்கள் சொன்னதைக் கேட்காமல் தமது சுயாதீனத்தைப் பரிசோதிக்கப்போய் துன்பப்பட்டுவரும் நிலைமை காவல்துறை ஆணைக்குழுவிற்கு இந்த விடயத்தில் தவிர்க்கப்பட்டுவிட்டது. என்றாலும் ஆட்சியாளர்களின் இத்தகைய போக்கு சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளைக் கேலிக்கூத்தாக்குகின்றது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்கள் எதற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறக் கூடிய வகையில் அவற்றின் செயற்பாடுகளுக்கு ஆட்சியாளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

# பல்கலைக் கழகப் பேராசிரியர் சங்கம் விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பிப்பர்

## நம்புகிறார் கல்வி அமைச்சர் சுசில்



பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கத்தின் கோரிக்கைகளுக்கு மிகவும் சாதகமான பதில் அனுப்பி இருக்கிறேன். அதனால் பெரும்பாலும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தால் மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் பத்து விடைத்தாள்களின் பிரதான பரிசோதகர்கள் தங்களின் கடமையை ஆரம்பித்திருக்கின்றனர் எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவிவித்தார் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது விடைத்தாள் பதிப்பீட்டு நடவடிக்கை தொடர்ந்து தாமதிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் வீரசுமன வீரசேகர எழுப்பிய இடையீட்டு கேள்வியொன்று பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து விடையளிக்கையில் -

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கத்தின் 4 கோரிக்கைகளில் 3 கோரிக்கைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுத்தேன். வரி தொடர்பான கோரிக்கையை திறைசேரிக்கு அனுப்பினேன்.

என்றாலும் பல்கலைக் கழக பேராசிரியர்களின் சங்கத்துடன் நான் தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்து வந்தேன். எனது வரையறைக்குள் என்னால் முடிந்த தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறேன்.

என்றாலும் தற்போது கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களின் 10 விடைப்பத்திரங்களின் பிரதான பரிசோதகர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்திருந்தார். ஏனைய நடவடிக்கை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று பல்கலைக் கழக பேராசிரியர்களின் சங்கத்தின் கடிதம் ஒன்றின் பிரதி ஒன்று எனக்கு கிடைக்கப்பெற்றது. அதில் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு மிகவும் சாதகமான பதில் அனுப்பினேன். அதன் பிரகாரம் இந்த பிரச்சினை நிறைவடையும் என்றே பரீட்சை ஆணையாளர் என்னிடம் தெரிவித்தார். - என்றார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிய பின்னர் மீண்டும் பயங்கரவாத தடுப்புச்சட்டம் வேண்டாம்

## டிலான் பெரேரா வலியுறுத்து

கொழும்பு, ஏப். 27

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிய பின்னர் மீண்டும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தேவையில்லை. பயங்கரவதா நடவடிக்கையை தடுப்பதற்கு தண்டனைச் சட்டத்தின் ஒரு பகுதியாக அதற்கு தேவையான சட்டங்களை உள்வாங்க முடியும்.

அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு முன்னர் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க் கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

பயங்கரவாத சட்டத்தை நீக்கிய பின்னர் மீண்டும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தேவையில்லை. பயங்கரவாத நடவடிக்கைகளை நாட்டின் தண்டனை சட்டத்தின் ஒரு பகுதியாக உள்வாங்க முடியும்.

பயங்கரவாத நடவடிக்கை ஒன்றை அவசரமாகத் தடுப்பதற்குத் தேவையான நிலை ஏற்பட்டால் அவசரகால சட்டத்தை கொண்டுவந்து அதன் ஊடாக அ தனைக் கட்டுப்படுத்த முடியும். அவ்வாறு செயற்பட்டால் மாத்திரமே எமக்கு சரியான திசைக்கு பயணிக்க முடியும்.

அத்துடன் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டி இருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கான தேவை நாட்டில் இருக்கிறது.

ஆனால், அந்த திருத்தம் அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை அடக்குவதற்கோ ஊடகங்களை அடக்குவதற்கோ இலக்காக அமையக்கூடாது. புதிய பயங் கரவாத எதிர்ப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்ற ஊடகவியலாளர்களும் அடக்கப்படுவார்கள்.

அதனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.



21 தடவை திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள அரசமைப்பொன்றே எமக்கு இருக்கிறது. எனவே நீதி அமைச்சர் பயங்கரவாதத் திருத்தச் சட்டமூலம் தயாரிப்பதற்கு பதிலாக அரசமைப்பொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

மேலும் அரசமைப்பு திருத்தத்தின் போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை அல்லாமலாக்கினால் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான பேச்சுக்கு இடமில்லாமல் போகும்.

இன்று நாட்டை நிர்வகிப்பது மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவராவார். அதனால் ஆளும் எதிர்க்கட்சி அனைவரும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

# மலையக மக்களின் நிவாரணங்கள் திட்டமிட்டவகையில் இல்லாமலாக்கல்!

## வடிவேல் சுரேஷ் சபையில் கண்டனம்

கொழும்பு, ஏப். 27

அரசாங்கத்தின் அரிசி நிவாரணம் பெருந்தோட்ட மக்களுக்கு கிடைக்கப்பெறுவதில்லை இது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, ஒட்டுமொத்த மலையக மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிலித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாட்டில் அரிசி நிவாரணம் அல்லது வேறு எந்த நிவாரணங்களை வழங்கும்போது சமுர்த்தி பட்டியலை பார்த்தே வழங்கப் படுகிறது. ஆனால் பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் திட்டமிட்டவகையில் சமுர்த்தி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறனர்.

அதனால் அரசாங்கத்தின் நிவாரணங்கள் சமுர்த்தி பட்டியல் அடிப்படையில் வழங்குமாக இருந்தால் பெருந்தோட்ட மக்களுக்கு கிடைக்காது இது பாரிய அநியாயமாகும். அதனால் அரிசி நிவார ணம் பெருந்தோட்டம் உட்பட மலையக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன் பெருந்தோட்ட மக்களின் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக உறுதியளித்த ஜனாதிபதி காணாமல் போயிருக்கிறார். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கவேண்டும் என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து பெருந்தோட்ட கம்பனிகள் உயர் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருக்கின்றன. 2020 இல்தான் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கவேண்டும் என நாங்கள் தெரிவித்து வந்தோம். ஆனால் 2023 இலும் அதனை வழங்காமல் இருக்க பெருந்தோட்ட கம்பனிகள் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றன.



அதனால் மலையக மக்களின் அனைத்து வரப்பிரசாதங்களும் திட்டமிட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதே போன்று காணி பிரச்சினை, தொழிலாளர்களின் ஈபி.எப்., ஈடிஎப் பிரச்சினை என பல பிரச்சினைகளுக்கு மலையக மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

அதனால் பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் சம்பந்தமாகவும் அவர்களின் வரப்பிரசாதங்களை பெற்றுக் கொடுப்பதற்காகவும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மலையக மக்களின் நிவாரணங்கள் திட்டமிட்ட வகையில் இல்லாமலாக்கப்பட்டு வருவதை வன்மையாக கண்டிக்கிறேன். - என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரமும் வழமையான மோசடிபோல் மூடிமறையும்

## விஜித ஹேரத் சாடல்



கொழும்பு, ஏப். 27

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல்விபத்தால்கடல்வழங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் 40 துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள்.

கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்ட மோசடிகளை போலவே எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் மறைக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

முழு கடல் வளத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்திய எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் தற்போது விசேட கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு விபத்து இடம்பெற்ற போது ஏற்பட போகும் விளைவுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள், துறைசார் நிபுணர்கள் அரசாங்கத்திடம்எடுத்துரைத்த போது உரியதரப்பினர் ஆலோசனைகளை செவிமெடுக்கவில்லை.

கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஆராய கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் குழுவை நியமித்தது.

இடைக்கால ஆய்வு அறிக்கையை குழுவினர் சமர்ப்பித்துள்ளார்கள். கப்பல் விவகாரம் தொடர்பாக அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இடையில் மாறுப்பட்ட கருத்து பரிமாற்றங்கள் தற்போது காணப்படுகின்றன.

நான் குறிப்பிடவில்லை, எனக்கு தெரியாது,அவர் தான் குறிப்பிட்டார் என அதிகாரத்தில் இருந்தவர்கள் தற்போது குறிப்பிட்டு பொறுப்பில் இருந்து விலக முயற்சிக்கிறார்கள்.

அறிக்கையில் உணர்வுபூர்வமான விடயங்கள் காணப்படுவதால் அதனை பகிரங்கப்படுத்த முடியாது என நீதியமைச்சர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தேசிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. ஆகவே குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆட்சியில் பல மோசடிகள் இடம்பெற்றன. சீனி வரி குறைப்பு மோசடி முதல், இந்தியாவில் இருந்து நெனோ நைட்ரஜன் திரவ உரம் இறக்குமதி வரை மோசடி இடம் பெற்றன.

மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் இதுவரை யார் குற்ற வாளி என்பது பகிரங்கப்படுத்தப் படவில்லை. ஆகவே எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் வழமையான மோசடிகளை போல் மூடி மறைக்கப்படும். - என்றார்.

மோசடியாளர்களின் வலையில் சிக்கி

# ஓமான் சென்று நிர்க்கதியான இலங்கையர்கள்

இலங்கையர்களை, ஓமான் தொழில்வாய்ப்புக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, முன்னெடுக்கப்படும் மோசடி தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த ஒருவர், கடுவளை நகரில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றை முன்னெடுத்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை, போலியான முறையில் தயாரித்து, இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறாக ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் நபர்கள், மோசடியாளர்களால் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட வீட்டில், பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட சிலர், ஓமானில் இருந்தவாறு தகவல் வெளியிட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் தம்மை அழைத்து வந்து, பின்னர், ஓரிரு வாரத்தில் அல்லது ஓரிரு மாதத்தில் விசாவைப் புதுப்பிப்பதாகக் கூறி, ஐந்தரை இலட்சம் ரூபாவை தம்மிடமிருந்து பெற்றதாகப் பாதிக்கப்பட்ட ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நபர்களிடம் ஆறு, ஏழு இலட்சம் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், தொழில்வாய்ப்பு வழங்கப்படாமல், வெளியே செல்லவும் அனுமதியின்றி, வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டி உள்ளதாகவும் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபடும் நபர், தற்போது ஓமானில் தங்கி இருக்கின்ற நிலையில், பாதிக்கப்பட்டவர்கள், அவரிடம் தங்களுக்கு விசா நீடிப்பையோ அல்லது தொழில் வாய்ப்பையோ பெற்றுத்தருமாறு கோரி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, சந்தேக நபர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் போலியான இறப்பர் முத்திரையைப் பயன்படுத்தி, சுற்றுலா விசாவில் பெண் ஒருவரை ஓமானுக்கு அனுப்ப முயற்சித்த நிலையில், குறித்த பெண், கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(02)

# ஆலையடிவேம்பு கண்டக்குழி குளத்தை மண்கொட்டி குளம் அபகரிக்க முயற்சி!

## தடுத்து நிறுத்திய பிரதேச செயலாளர்



அம்பாறை ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கண்டக்குழி குளத்தை மண்நிரவி குளத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட வரை பிரதேச செயலாளர் வி.பாபகரன் தடுத்து நிறுத்திய சம்பவம் நேற்று (புதன்கிழமை) இடம் பெற்றுள்ளது.

குறித்த பிரதேச செயலகத்தின் கீழ் பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள இந்து மயானத்துக்கு எதிராகவுள்ள கண்டக்குழி குளத்திலிருந்து அந்தபகுதி விவசாயிகள் வயல் நிலங்களுக்கு நீரை பெற்றுவருவதுடன் கால் நடைகளும் அந்த குளத்து நீரைப் பயன்படுத்தி வருகின்றன.

இந்த நிலையில் கடந்த கால யுத்த சூழல் காலத்தில் அந்த பகுதியில் விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருந்த நிலையில் தமிழ் மக்கள் அங்கு செல்லமுடியாத சூழலை பயன்படுத்தி ஒரு தரப்பினர் குளத்தின் ஒரு பகுதியை அபகரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு 10 லட்சம் ரூபா செலவில் பிரதேச செயலகத்தால் புனரமைக்கப்பட்ட அந்த குளத்தின் அருகில் சிலர் அடிக்கடி சென்று தமது நிலம் என சொந்தம் கொண்டாடி குளத்தை அபகரிக்க முற்பட்டு தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்று வந்தன.

இவ்வாறான நிலையில் அக்கரைப்பற்று எல்லை பகுதியிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அரச காணிகள் குளங்கள் வெள்ளநீர் ஓடும் வாய்க்கால்களை சிலர் திட்டமிட்டு சட்டவிரோதமாக அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக இந்த கண்டக்குழி குளத்தின் ஒரு பகுதியில் திடீரென அந்த பகுதியை சேராத ஒருவர் கனரக வாகனத்தில் மண்ணைக் கொண்டுவந்து கொட்டி குளத்தை நிரப்பும் செயற்பாட்டில் ஈடுபடுவதை பொதுமக்கள் பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து உடனடியாக பிரதேச செயலாளர் சென்று குள அபகிப்பதை தடுத்து நிறுத்தியுள்ளார்.

அதேவேளை குளத்தின் அருகிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் இருந்து கழிவான உமிகளை குளத்தினுள் கொட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவு புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டது

## யாழ். ஆயர் இல்லம் தகவல்

கச்சதீவில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

சிலை அகற்றப்பட்ட விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்கள்.

இவ்விடயத்தை அமைதியானமுறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

அத்துடன், அது தொடர்பில் யாழ்.மாவட்ட செயலருக்கு கடிதம் மூலம் ஆயர் இல்லம் சார்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் நன்றி தெரிவித்துள்ளார்.


# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 05 மூத்தவிநாயகர் கோயில் வீதி 1 ஆம் ஒழுங்கை 39/7 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் P.சிற்றம்பலம் பெண் காமாட்சி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 2010ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய 7360 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் யாழ்ப்பாணம், நல்லூர், மூத்த விநாயகர் கோவில் ஒழுங்கை, கச்சேரி 6/12 இனைச் சேர்ந்த கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினியும், அவ்வூர் மகேந்திரன் நந்தகுமார் பெண் ஜானுதியும், அவ்வூர் செல்லத்துரை செல்வரூபன் பெண் சிலோஜினியும் ஆகியோர் 2010.10.18 ஆம் திகதியிட்டு அனுமதி பெற்ற நிலஅளவையாளரால் 1839 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 1. துண்டு 2, 2, துண்டு 3 என பிரிவிட்டு பிரிவிடல் உறுதி நிறைவேற்றியுள்ளார். குறித்த ஆதனத்தின் தாயுறுதியினை விபரிக்கும்போது 1988.02.27 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ப.கதிரவேலு முகதாவில் 13847 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியால் கந்தையா விஸ்வநாதனினதும் பெண் சறோஜினிதேவியினதும் கொள்விலை என்றும் குறித்த கந்தையா விஸ்வநாதனும் பெண் சறோஜினிதேவியும் மரணசாதனம் எதுவுமின்றி நிர்வாகத்தத்துவப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களை விட்டிறக்க அவர்களின் பிள்ளைகளான தர்மினி, ஜானுதி, சிலோஜினி ஆகியோரை தந்தை வழிமுதுசமாகவும், தாய்வழி முதுசமாகவும் வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை சொரியலாக ஆண்டு அனுபவிப்பது வசதீயீனம் எனக்கண்டு மனமொத்து சமமாகவும் சமாதானமாகவும் பிரிவிடல் செய்து நிந்தமமாக்கப்பட்டு பிரிவிடல் உறுதி நிறைவேற்றிக்கொண்டுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை குஞ்சாச்சி வளவும் மறுபிரிவுகளும் நிலபரப்பு 3 குளி 07.69 உம் வீடும் கிணறும் மலசலகூடமும் வான்பயிர்களும். இது 2010.10.18 ஆம் திகதி நில அளவையாளர் அளந்து தயாரித்த 1839 ஆம் இலக்கப்படத்தின் படி துண்டு 1 துண்டு 2 துண்டு 3 என அடையாளமிடப்பட்ட நிலபரப்பு 3 குளி 04.61 என அடையாளமிடப்பட்டுள்ளது. இதில் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பாகம் நிலப்பரப்பு ஒன்று (நில.பல.1) அதனுள் அடங்கிய அனைத்தும் இந்த நிலபரப்பு ஒன்றுக்கும் எல்லை.

கிழக்கு:- துண்டு 2 என அடையாளமிடப்பட்ட நந்தகுமார் ஜானுதியின் ஆதனம்
வடக்கு:- மருதநாயகம் மகள் மிருதாலினியின் ஆதனம்.
மேற்கும் தெற்கும் :- ஒழுங்கை இதடங்கலும்.

இவ்வாதனம் விஸ்வநாதன் மகள் தர்மினிக்கு இன்று முதல் நிந்ததும்' சொந்தமுமாகவுடையது. தற்போது கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினி என்னும் பெயரிற்கு செய்வதால் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

# ஆதனப்பெயர்மாற்றம்

வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் இல 36/8, 36/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 05 ஆம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி இலக்கம் 36/8, 36/10 ஐ, சேர்ந்த டேவிற் அலெக்ஸாண்டர் 15.12.1997 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் உறுதி இல. 1742 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் அவர்கள் தனது பூட்டன் வெலிச்சோர் இன்னேசம் காலத்திலிருந்து அவரின் மகளான டேவிட் பெண் அன்னம்மாவைத் தொடர்ந்து ஆட்சியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தங்கு தடையின்றி இருந்து வருவதாக வெளிப்படுத்துகிறார்.

பின்னர் யாழ்ப்பாணம், இராஜேந்திரா வீதி 42/9 ம் இலக்கத்தைச் சேர்ந்த அலெக்சாண்டர் கைம்பெண் றெஜினாவும், தற்போது பிரான்சில் இருக்கும் தர்சன் தர்மரட்ணமும் பெண் ஜெரின் அலெக்சியாவும், இக்னேசியஸ் லொயலா அலெக்சாண்டரும் மொறிசியஸ் லொயலா அலெக்சாண்டரும் ஆகியோர் தங்கள் அற்றோனி தத்துவக்காரர் யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதி இல.42/9, ஐ சேர்ந்த சின்னத்துரை சிவரூபன் பெண் ஜறின் சோபியா மூலம் 2013.03.03 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. லிங்கா துரைராஜா முகதாவில் உறுதி இல 9027 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிளன்சியஸ் லொயலா அலெக்சாண்டருக்கு நன்கொடையாக கொடுத்துள்ளனர்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை. குளத்தில் வளவும் மாவிலங்கையடி வளவும். இது 1990.05.05 ஆம் திகதி நில அளவையாளர் ஏ.ஜே.யோசேப் அளந்து தயாரித்த 105 ஆம் இலக்கபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்ட நெற்பரப்பு 02 குளி 07 ஆம் அதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லை.

கிழக்கு :- 10 அடி அகலங் கொண்ட பொதுப்பாதை.
வடக்கு :- துண்டு 2 என அடையாளமிடப்பட்ட ஆதனம்.
மேற்கு :- ஜெயசீலன் பெண் சர்மாவின் ஆதனம்.
தெற்கு :- துண்டு 4 என அடையாளமிடப்பட்ட ஆதனம். இதடங்கலும்.
சோலைவரி மதிப்பீட்டு எண் 36/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை. குளத்தில் வளவும் மாவிலங்கையடி வளவும். இது வளவும். இது 1990.05.05 ம் திகதி நில அளவையாளர் ஏ.ஜே.யோசேப் அளந்து தயாரித்த 105ஆம் இலக்கபடத்தில் துண்டு 4 என அடையாளமிடப்பட்ட நெற்பரப்பு 02 குளி 07ஆம் அதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லை.

கிழக்கு :- 10 அடி அகலங் கொண்ட பொதுப்பாதை.
வடக்கு :- துண்டு 3 என அடையாளமிடப்பட்ட ஆதனம்.
மேற்கு :- சத்தியசீலன் பெண் சர்மாவின் ஆதனம்.
தெற்கு :- துண்டு 5 என அடையாளமிடப்பட்ட ஆதனம். இதடங்கலும்.
சோலைவரி மதிப்பீட்டு எண் 36/8 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்


தற்போது கிளன்சியஸ் லொயலா அலெக்சாண்டர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் மாதத்திற்குள் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு இருப்பின் யாராவது உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிளன்சியஸ் லொயலா அலெக்சாண்டர் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

## அட்டப்பள்ளத்தில் கடலரிப்பு தீவிரம்



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரிவுக்குட்பட்ட அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் மிகவும் மோசமாக கடல் அரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாக கடலுக்கு அருகே உள்ள தென்னை மரங்களை காவு கொண்டும் கட்டடங்களை உடைத்தும் சேதம் விளைவித்து வருகிறது. நிறைய தென்னை மரங்களை உள்வாங்கிய கடல் அருகிலுள்ள மீனவர் கட்டடம் ,கிணறு என்பவற்றையும் உள்வாங்கி வருகிறது என ஆலய தலைவர் த.கோபாலன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். வித்தியாரம்ப விழா திங்களன்று





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா திங்கட்கிழமை கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.எம். அல் - அமீன் றிசாட் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.றியாஸ், ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹரூன் மற்றும் சாய்ந்தமருது மக்கள் வங்கியின் உப முகாமையாளர் ஏ.ஆர். றிஸ்வான் முஹம்மட் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் முதலாம் தரத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## நாட்டில் சட்டம், ஒழுங்கை கோட்டா பாதுகாக்கவில்லை!

### அட்மிரல் சரத் வீரசேகர சாடல்



நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதுவே பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; -

பொருளாதாரப் பாதிப்புக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என்று குறிப்பிட வேண்டும். சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இருந்து ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளைப் புறக்கணித்து சகல பொருள்களையும் இறக்குமதி செய்ததை மறந்து விட கூடாது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத சூழலில் நல்லாட்சி அரசாங்கம் அரசமுறை கடன்களை வரையறையில்லாமல் பெற்றுக்கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். வெளிநாட்டு கடன்களை பெறுவது இல்லை என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி அவர் செயற்பட்டார். கொவிட் பெருந்தொற்று தாக்கம் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது.

நாட்டின் பொருளாதார நிலையின் உண்மை தன்மையை கோட்டபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்துரைத்திருந்தால் யுத்த காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியதை போல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கியிருப்பார்கள்.

பொருளாதார விவகாரத்தில் மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்பட்டது. இதனை அரசியல் தரப்பினர் தமக்கு சாதகமாக பயன்படுத்தி இராச்சியத்துக்கு எதிரான போராட்டத்தை தோற்றுவித்தார்கள்.

மறுபுறம் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தவில்லை, எவர் வேண்டுமானாலும் போராட்டத்தில் ஈடுபடலாம், யார்யாரையும் தாக்கலாம், வீடுகளுக்கு தீ வைக்கலாம், என்ற நிலை காணப்பட்டது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்த ஆதரவாளர்கள் பேர வாவியில் தள்ளப்பட்டு தாக்கப்பட்டார்கள். ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இடம்பெற்ற பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக கோட்டபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். நாட்டில் சட்டம் ,ஒழுங்கை நிலை நாட்டாமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என்பதை அவர் முதலில் விளங்கிக் கொண்டு குறுகிய காலத்துக்குள் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாக போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினரின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும். பல இலட்சம் சம்பளம் பெறும் தரப்பினரால் ஏன் வரி செலுத்த முடியாது. கடுமையான தீர்மானங்களை செயற்படுத்தினால் மாத்திரம் தான் நடுத்தர மக்களுக்கு நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். - என்றார்.

## மட்டு. சித்திரைக் கொண்டாட்டம் ஏப். 30 ஏற்பாடுகள் தடல்புடல்

(கல்லடி நிருபர்)

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து பெருமையுடன் நடத்தும் சித்திரை வசந்தம் - 2023 ஏப்ரல் 30 வெபர் மைதானத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா தலைமையில் காலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணிவரை பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் மாலையில் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

தொடக்க நிகழ்வாக காலை 6.30 மணிக்கு காந்திப்பூங்காவில் இருந்து இருபாலாருக்குமானசைக்கில் ஓட்டமும் மரதன் ஓட்டமும் இடம்பெறும். காலை 8.30 மணிக்கு முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டமும் பிற்பகல் 2 மணிக்கு வழுக்கு மரம் ஏறுதல், தலையனைச்சமர்,

முட்டி உடைத்தல் புதுவருட அழகன் அழகி போன்ற சுவாரஸ்யம் நிறைந்த போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து காலை 11மணிக்கு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் அதிதிகளினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இதில் பாரம்பரிய உணவு கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனை கூடங்கள் இடம்பெறவுள்ளன.

மரதன் ஓட்டம் (ஆண் / பெண்), சைக்கிலோட்டம் (ஆண் / பெண்), தோணி ஓட்டம் (ஆண்), நீச்சல் அஞ்சல் ஓட்டம் (கலப்பு), வழுக்கு மரம் ஏறுதல் (குழு), முட்டி உடைத்தல், தலையனை சமர், கயிறு இழுத்தல் (ஆண் / பெண்), கிடுகு இழைத்தல் (பெண்), கோலம் போடுதல் (பெண்), சைக்கிள் மெதுவோட்டம் (50 வயதுக்கு மேல் ஆண்), யாணைக்கு கண் வைத்தல் (சிறுவர் சிறுமியர் 10 -15 வயது), சாக்கோட்டம் (10 - 15 வயது), பெண்களுக்கான தேங்காய் துருவுதல் (துருவிலை மட்டும் கொண்டுவருதல் வேண்டும்), தேசிக்காய் சமநிலை ஓட்டம் (10 தொடக்கம் 15 வயது தேசிக்காய் மற்றும் கரண்டி என்பன வழங்கப்படும்), ஊசிக்கு நூல் கோர்த்தல் (ஆண் / பெண்), போத்தலில் நீர் நிரப்புதல் (10-15 வயது), மிட்டாய் ஓட்டம் (10 வயதுக்குட்பட்ட சிறார்கள்), பலூண் உடைத்தல் (10 -15 வயது), சங்கீதக் கதிரை (பெண் உத்தியோகத்தர்கள்), தொப்பி மாற்றுதல் (ஆண் உத்தியோகத்தர்கள்), கயிறு இழுத்தல் - பொலிஸ் மற்றும் இராணுவம் (ஆண்) பொலிஸ் மற்றும் மாவட்ட செயலகம் (பெண்), கிராமியப்பாடல் (35 வயதுக்கு மேற்பட்டோர்), புத்தாண்டு அழகன், அழகி போட்டிகள் போன்றவை இடம்பெற்றதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மட்டுநகர் சுப்பர் சங்கீத் இசைக்குழு வழங்கும் அட்டகாசமான இசைநிகழ்ச்சி என பல்வேறுபட்ட சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மாவட்ட செயலக சித்திரை வசந்தம் நிகழ்ச்சி கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

## உணவுப் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளில் இலங்கை இல்லையாம்

### உலக வங்கி அறிவிப்பு

உணவுப்பொருள்களின் விலையேற்றம் அதிகம் உள்ள 10 உலக நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியால் தொகுக்கப்பட்ட பட்டியலில் பல வாரங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்த இலங்கை, புதிய தரவில் நீக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் காரணமாக இலங்கை அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இல்லை என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

உலக வங்கி தனது சமீபத்திய மதிப்பீட்டில், லெபனான் நாட்டிலேயே அதிக உணவு விலை பண வீக்கம் காணப்படுவதாகக் கூறியுள்ளது.

261 சதவீதத்துடன் லெபனான் தரவரிசையில் முதல் இடத்தைப்பிடித்துள்ளது. மேலும் சிம்பாப்வே மற்றும் அர்ஜென்டினா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

## காலணிகள் மற்றும் புத்தகப் பைகள் மாணவர்களுக்காக விலை குறைப்பு!

*டொலரின் மதிப்பு குறைந்துள்ளதால், பாடசாலை மாணவர்களின் காலணிகள், புத்தகப் பைகளின் விலை குறைக்கப்படவுள்ளது.*

*அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு பின்னர் இவற்றின் விலையை 500 முதல் 1000 ரூபா வரை குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.*

*புத்தகப் பை, காலணிகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் விலைகள் குறைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

## தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாள்











(எஸ்.நிதர்ஷன்)

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும் இன்று தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றன.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவர் ஓய்வு நிலை ஆயர் ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இன்று காலை இப்நிகழ்வு நடைபெற்றது.

தந்தை செல்வாவின் சிலைக்கு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மலர் மாலை அணிவித்து நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து தந்தை செல்வாவின் குடும்பத்தினரும் தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் மலர்மாலை அணிவித்தனர். இதன் பின்னர் தந்தை செல்வாவின் நினைவு சமாதிக்கு நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நினைவுப் பேருரை இடம்பெற்றது. தமிழ் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்த செல்வா சாதித்தவைகள் என்னும் கருப்பெருளில் நினைவுப் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ. நவரத்தினம் ஆற்றினார்.

இந் நிகழ்வில் மதத் தலைவர்கள் தந்தை செல்வாவின் குடும்பத்தவர்கள், தமிழரசுக் கட்சியினர், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 13 புதன்கிழமை 26.04.2023 கதிர் 40

## ஜனாதிபதியின் கனவுலகைவிட நடைமுறைச் சூழலே வெல்லும்

### அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதியின் கனவுலகத்தைவிடவும்நடைமுறைச் சூழலே வெற்றியளிக்கும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சர்வதேசநாணயநிதியத்தின் கடன் திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டஉடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்உரையின் பின்னர் விவாதத்தில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 2



## கோட்டாபயவை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது

### அத்துரலிய ரத்தன தேரர் சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள். வரலாற்றில் அவருக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

கோட்டாபயராஜபக்சவின் தான்தோன்றித்தனம் காரணமாகவே நாடு இந்த நிலைக்குச் சென்றது.

கோட்டாபய போன்ற பலவீனமான ஒருவரை ஆட்சிக்குக் கொண்டுவந்தது பிழை என்பதை இப்போது உணர்கின்றேன். இயற்கை விவசாய கருத்திட்டத்தைக் கொண்டுவந்தது நான்தான். ஆனால், அதை 24 மணி நேரத்துக்குள் நடைமுறைப் படுத்துமாறு நான் கூற வில்லை. ஆனால், கோட்டா அதை உடனடியாக நடைமு-றைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு பிரச்சினையும்.

அது தொடர்பில் எனது கருத்துக்களைச் சொல்வதற்கும் அவர் இடம் தரவில்லை. அவரை நாட்டு மக்கள் மன்னிக்கமாட்டார்கள். வரலாற்றில் அவருக்கு ஒருபோதும் மன்னிப்புக்கிடையாது-என்றார்.02

## பற்றாக்குறையான பாடப்புத்தகங்கள் அடுத்த மாத இறுதிக்குள் கிடைக்கும்

### கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவிப்பு

பாடசாலைகளில் பற்றாக்குறையாக உள்ள பாடப்புத்தகங்களை அடுத்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுவரை அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்தே பாடப்புத்தகங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களும் இவ்வாறு விநியோகிக்கப்படுவதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது. இம்முறை 33 மில்லியன் பாடப்புத்தகங் கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்காக 16,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

# தேசியக் கொள்கையினை உருவாக்க இணைவோம்

### ஒட்டுமொத்த நாடாளுமன்றத்துக்கும் ரணில் இன்று அழைப்பு

**சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இலங்கைவரும் குழுவுடன் பேச்சு நடத்தி தீர்வைக் காணும் அதேநேரம், முழு நாடாளுமன்றமும் ஒரே ஆட்சியாக மாறி தேசியக்கொள்கையைஉருவாக்க ஒன்றிணைவோம்.**

**இவ்வாறு இன்று அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**இலங்கையின் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க வேண்டும் என்று வெளிநாட்டு கடன்கொடுநர்கள் முன்மொழிந்துள்ளனர் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆட்சி வெளிநாட்டு கடன்கொடுநர்களுடனான கலந்துரையாடல்களைத் தொடங்கும்போது, உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது குறித்து முடிவெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.**



சர்வதேச நாணய நிதியத்துடன் மார்ச் மாதம் இலங்கை அரசு செய்துகொண்ட உடன்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் தொடங்கிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின்மொத்தக்கடனானது 83.6பில்லியன்டொலர்களாகும். அதில் வெளிநாட்டுக் கடன்கள் 41.5 பில்லியன் டொலர்களாகும். உள்நாட்டுக் கடன்கள் 42.3பில்லியன்டொலர்களாகும். இந்தக்கடன்கள் அனைத்தையும் மறுசீரமைக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டுக்கடன்வழங்குநர்களுடன் கலந்துரையாடல்களைச்செய்கின்றோம். அவர்கள் உள்நாட்டுக் கடன்வ-ழங்குநர்களுடன் மறுசீரமைப்புக் குறித்துக் கலந்துரையாடுமாறு கோரியுள்ளனர்.

உள்நாட்டுக்கடன்மறுசீரமைப்பை எதிர்கொள்ளமுடியாதுஎன்றுசிலவங்கிகள் கூறியுள்ளன.அவ்வாறுகூறுகின்றஎந்தத் தரப்பினராக இருந்தாலும் அவர்கள் பொருளாதார மீட்சி நடவடிக்கையைப் பொறுப்பேற்று முன்னெடுக்க முடியும். அவ்வாறானவர்களிடத்தில் அந்தப் பணியை ஒப்படைப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

துப்பாக்கிகளை தலையில் வைத்துக்கொண்டு செயற்பட்டால் அனைத்தும் சீர்குலையும் ஒவ்வொருவரும் என்று கூறுகின்றனர். கடன்மறுசீரமைப்பு இடம்பெற்றால் பங்குச்சந்தை சீர்குலையும் என்று பங்குச்சந்தையாளர்கள்குறிப்பிடுகின்றனர். அவ்வாறு பங்குச் சந்தைகள் சீர்குலைந்தால் அவற்றை நான் மூடிவிடுவேன். தற்போது நிலைமைகள் சீராகி வருகின்றபோது அவர்களால் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூற முடியாது.

இந்த நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை எடுப்போம். என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவோம். ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளனர். எனினும் அதன் அங்கத்தவர்களுக்கு எவ்விதமான பாதிப்பையும் நாம் ஏற்படுத்தவில்லை அல்லவா? ஊழியர் சேமலாப நிதியத்தினை நாமே ஆரம்பித்தோம். அதனை சீர்குலைவதற்கு இடமளிப்போமா?

தற்போதையநிலையில்சர்வதேச நாணயநிதியத்தினைதவிரஎம்மிடத்தில் மாற்றுவழிகள் வேறு எவையும் இல்லை. அவ்விதமான வழிகளை யாரும் முன்வைக்கவுமில்லை. வேறு செயற்பாட்டுத்திட்டமில்லைஎன்பதால் நாம் இதனை அங்கீகரிக்கவேண்டும். ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் விசேடமாக ஒருவிடயத்தினை தெரிவிப்பதற்கு விரும்புகின்றேன்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதென்றே ஐ.தே.கவில் இருக்கும்போதே தெரிவித்தேன். அதனை ஆதரித்தும் இருந்தீர்கள். தற்போது அதற்கான வேலைத்திட்டம் உள்ளது. ஆகவே நாடாளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்நிலைமையேஉள்ளது. ஆகவேநாம்அனைவரும்இணைந்து இதனைஏற்றுக்கொள்வோம். சர்வதேச நாணயநிதியத்துடனானஒப்பந்தத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் ஆறு மாதங்களுக்கு ஒருதடவை இலங்கைக்கு வருகின்ற அதன்குழுவினருடன்கலந்துரையாட முடியும். குறைபாடுகளுக்குத் தீர்வு காண முடியும்.

சில தொழிற்சங்கங்கள் தமக்கான வரிச்சலுகைகள் தொடர்பில் பிரச்சினைகளை எழுப்பியுள்ளனர். அது தொடர்பில் கலந்துரையாடி ஆறு மாதங்களுக்குள் தீர்வினைப் பெறுவோம்.

அதன் பின்னர் அனைவரும் இணைந்து தேசியக் கொள்கையை உருவாக்குவோம். முழு நாடாளுமன்றமுமேஓர்ஆட்சியாகமாறவேண்டும். அதற்காகஅனைவரும்ஒன்றிணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுகின்றேன் - என்றார்.

## மக்களை அரசு ஏமாற்றி வருவது வருந்தத்தக்கது

### சபையில் சஜித் தெரிவிப்பு



முக்கியமான தகவல்களைத் திரிபுபடுத்தி மக்களை அரசு ஏமாற்றி வருவது வருந்தத்தக்கது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த செப்டெம்பரில் அரசு சர்வதேச நாணய நிதியத்துடன்ஊழியர்கள்மட்டத்திலான ஒப்பந்தத்தை எட்டியதாகக் கூறப்பட்டதிலிருந்து, அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்க விடயங்களை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு பல சந்தர்ப்பங்களில் அரசிடம் கோரிக்கை விடுத்தோம்.

இது தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைப்பதற்கான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாக அமைந்திருந்தது.

அவ்வாறு இருந்தும், அந்தக் கோரிக்கைகள் எதற்கும் அரசு செவிசாய்க்கவில்லை என்பதோடு, இவ்வருடம் மார்ச் 20 சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் இறுதி அங்கீகாரம் கிட்டும் வரை நாடாளுமன்றத்துக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எந்த விடயங்களையும் அறிந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அரசின் இந்த வெளிப்படைத்தன்மையற்ற நடத்தையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். முக்கியமான தகவல்களைத் திரிபுபடுத்தி மக்களை அரசு ஏமாற்றி வருவது 2

### அமைச்சருக்கு அதிகாரமேதுமில்லை

## இடமாற்றத்துக்கு எதிராக ரோஹண போர்க்கொடி!



இடமாற்ற உத்தரவுகளை வழங்குவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் இல்லை என்று தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, அமைச்சின் செயலாளர்வியானிகுணதிலக்கவுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதன்படி, அமைச்சின் இடமாற்ற உத்தரவை ஏற்றுக் கொள்வது கட்டாயம் இல்லை எனவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண உள்ளிட்ட 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்வதற்கு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, இதற்கு எதிரான இந்தக் கடிதத்தைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசமைப்பின் மூலம் பொலிஸ் அதிகாரிகளின் பதவிகளைமாற்றுவதற்குதேசிய பொலிஸ்ஆணைக்குழுவுக்கே அதிகாரம்வழங்கப்பட்டுள்ளது எனவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (02)

## சூடானிலிருந்து 41 இலங்கையர்கள் வெளியேற்றம்

வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள சூடானில் வசித்துவந்த இலங்கையர்களின் முதல் குழு வெற்றிகரமாக, அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதன்படி, சூடானில் உள்ள 41 இலங்கையர்களில் 13 பேர் சவூதி அரேபியாவில் உள்ள ஜெத்தா துணைத் தூதரகத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன், பதில் தூதரக அதிகாரியால் அவர்கள் வரவேற்கப்பட்டனர்.

சூடானில் சிக்கியுள்ள எஞ்சிய இலங்கையர்கள் இந்தியா அல்லது சவூதி அரேபியாவின் உதவியுடன் பாதுகாப்பாக வெளியேற்றப்படுவார்கள் என அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

ஏப்ரல் 15 சூடானின் கார்ட்டூமில் வன்முறை வெடித்தது. அந்நாட்டின் இராணுவத்திற்கும் துணை இராணுவ விரைவு ஆதரவுப்படைகளுக்கும்இடையே பல வாரங்களாக முறுகல் நிலை தொடர்ந்த வண்ணமுள்ளது.

சூடானில் அதிகரித்து வரும் அதிகாரப் போட்டியால்தலைநகர்கார்ட்டூமில் மோதல் நிலைமைகள் ஏற்பட்டதோடு பின்னர் விரைவில் நாட்டின் பிற பகுதிகளுக்கும் அது பரவியுள்ளது. இதில் 460க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். 4,000 பேர் காயமடைந்துள்ளனர்.

## சு.க. ஆதரவு



சர்வதேச நாணய நிதியத்தின், நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டம் தொடர்பான யோசனையை நாடாளுமன்றில் அங்கீகரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என்று அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புளத்சிங்கள பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போது, அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் 2

### செத்த வீட்டுக்குச் சென்ற சமயம்

## வவுனிக்குளத்தில் மூழ்கி சகோதரர்கள் இருவர் சாவு

### மல்லாவியில் பரிதாபம்

(ந.லோகதயாளன்)

மல்லாவியில் இடம்பெற்ற சாவுக்குச் சென்ற இரு சகோதரர்கள் வவுனிக்குளத்தில்நீராடச் சென்ற சமயம் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த இரு சகோதரர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மல்லாவியில் இடம்பெற்ற செத்தவீட்டில் பங்குகொண்டவர்கள் வவுனிக்குளத்தில் நீராடச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் சுழியில் அகப்பட்டுள்ளார். அவரை மீட்க சகோதரன் முயன்றுள்ளார்.

முடியாமல் இருவருமே நீரில் மூழ்கியுள்ளனர் என்று ஊரவர்கள் தெரிவித்தனர். .

இருவரினது உடல்களும் குளத்திலிருந்து மீட்கப்பட்டு தற்போது மல்லாவி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு ஆளுநராகின்றார் செந்தில் தொண்டமான்?



ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மே 2 ஆம் திகதி புதிய ஆளுநர்கள் சிலரை நியமிக்கவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதன்படி கிழக்கு மாகாண ஆளுநராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்படவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

மத்தியமாகாண ஆளுநர் பதவி முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு வழங்கப்படவுள்ளது.

அதன்பின்னர் ஏனைய மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர். எனினும், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தற்போதைய ஆளுநர் பதவி வகிப்பவர்கள் அப்பதவியில் நீடிப்பார்கள் எனவும் தெரிய-வருகின்றது. (02)

# காலாவதித் திகதி மாற்றிய சோடாக்கள் இன்று மாட்டின

## விநியோகத்தருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை





காலாவதித்திகதியைமாற்றிவிநியோகத்திற்குத்தயாராக இருந்த 1,710 சோடாப்போத்தல்கள் யாழ்ப்பாண சுகாதாரத்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் உள்ள சில கடைகளிற்கு விநியோகிக்கப்பட்ட சோடா போத்தல்களில் காலாவதி திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவ–னிற்கு தகவல் கிடைத்துள்ளது. சோடாப் போத்தல்களில் இருந்த காலாவதித் திகதியைச் சிதைத்து மாதம் சரியாகத் தெரிய–ாதவாறு செய்து விநியோகித்துள்ளார்கள் என்பதே அந்தத் தகவல்.,

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் யாழ். நகரக் கடைகளில் எழுமாறாகப் பரிசோதனை மேற்கொண்டனர். காலாவதி திகதி கடந்த சோடாப் போத்தல்களில் அசை மாற்றம் செய்தும் காலாவதித் திகதியை அழித்தும் சோடாப்போத்தல்கள் கடைகளிற்கு விநியோகம் செய்யப்பட்டமை பொது சுகாதார பரிசோதகர்களால் கண்டறியப் பட்டது.

இந்தச் சோடாப் போத்தல்களை விநியோகித்த முகவரின் பிறவுன் வீதியில் உள்ள களஞ்சியசாலையிலும் யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை நடத்தினர். இதன் போது காலாவதி திகதி அழிக்கப்பட்ட நிலையில் 1,110 சோடாப்போத்தல்களும் 600 திகதி காலாவதியான சோடாப் போத்தல்களும் என மொத்தம் 1710 சோடாப்போத்தல்கள், கடைகளிற்கு விநியோகம் செய்வதற்கு தயார் நிலையில் இருந்த போது பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.

குறித்த விநியோகஸ்தரிற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# செல்வா சதுக்கத்தில் இடிதாங்கி திருட்டு

## யாழ். பொலிஸ் நிலையம் முன்பாக சம்பவம்



யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்றலில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடி தாங்கி மற்றும் 80 அடி நீளமான இடி தாங்கிக்குரிய செப்பிலான இணைப்பி என்பன திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

தந்தை செல்வா சதுக்கத்தில் நீண்ட காலமாக மோட்டர் திருட்டும் இடம்பெறுவதாக தந்தை செல்வா சதுக்க பராமரிப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்

கிட்டத்தட்ட மூன்று தடவை ரூபா 75 பெறிமதியான மோட்டர்கள் திருடப்பட்டுள்ளன எனவும் திருட்டு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்பு உள்ள தந்தை செல்வா சதுக்க வளாகத்தில் தொடர்ந்து திருட்டு இடம்பெறுவதாகவும் பராமரிப்பாளர்கள் கவலை தெரிவித்தனர்.

# அதிகளவு மாத்திரையை உட்கொண்ட சிறுமி சாவு!

காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த ஏழு வயதுச் சிறுமி ஒருவர் அதிகளவு பரசிட்டமோல் மாத்திரையை உட்கொண்டதன் விளைவாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் உடஹெந்தென்ன பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உடஹெந்தென்ன, உடுவெல்ல தாமரவல்லி கொலனியில் வசிக்கும் தரம் 2 இல் கல்வி பயிலும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கம்பளை, குருந்துவத்தை வைத்தியசாலையில் இருந்து இரண்டு தடவைகள் அவருக்குப் பெற்றோர் மருந்து எடுத்துச் சென்றுள்ளனர்.

வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தளவுக்குப் பதிலாக வைத்தியசாலையின் மருந்தகத்தால் பரிந்துரைக்கப்பட்ட வயது வந்தோருக்கான டோஸ் சிறுமிக்கு வழங்கப்பட்டதால், சிறுமிக்கு அதிக டோஸ் கிடைத்ததையடுத்து சிறுமி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# ரயிலில் மோதி மாணவி சாவு!

ரயிலில் மோதி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தறையிலிருந்து காலி நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே குறித்த மாணவி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை, நுபே ரயில் கடவைக்கும் பாம்புரான ரயில் நிலையத்துக்கும் இடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹித்தெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேலும் மூன்று நண்பர்களுடன் விருந்துக்குச் சென்றுவிட்டு ரயில் தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மாணவியின் சடலம் மாத்தறை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# வலம்புரிச் சங்குடன் ஒருவர் சிக்கினார்!

வலம்புரிச் சங்குடன் ஒருவர் நுவரெலியா விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெப்பட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொறக்காப்பத்தன பகுதியில் இன்று முற்பகல் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில்மியாபுர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், கைப்பற்றப்பட்ட வலம்புரிச் சங்குடன் கெப்பட்டிபொல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 11.6 அங்குல நீளமும் 14 அங்குல சுற்றளவும் 500 கிராம் எடையும் கொண்ட வெள்ளை, மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் டைட்டானியம் வகையைச் சேர்ந்த வலம்புரிச் சங்கு கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருந்தத்தக்கது– நீங்கள் (ஜனாதிபதி) கூறுகின்ற விடயங்களை செயற்படுத்துகின்ற போது சில பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாக அரசாங்கத்தின் நிதிபற்றிய குழுவின் தலைமைப்பதவிக்கு இதுவரையில் நிரந்தரமான தலைவர் நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாக ஒருவரை நியமித்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றீர்கள்.

அக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக தலைவரும் அனைத்து திட்டங்களுக்கும் உடனடியாக அனுமதியை வழங்குகி;ன்றார். நீங்கள் உரையாற்றும் போது முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று கூறினாலும், உங்களது உரைக்கும் செயற்பாட்டிற்கும் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சரியான விடயங்களுடன் இணைந்து செயற்படுவதற்கும், ஆதரவளிப்பதற்கும் நாம் அனைத்துச் சந்தர்ப்பங்கிலும் தயாராகவே உள்ளோம்.

பிழையான விடயங்களுக்கு எம்மால் ஆதரவு வழங்க முடியாது. கோப் மற்றும் கோபா குழுக்களின் பதவிகளை கபீருக்கும் ஏரானுக்கும் வழங்கி இருக்க முடியுமல்லவா? கூலித்தொழிலைச் செய்வதைப் போன்று தலைவர் பதவியை ஒவ்வொருவருக்கும் வழங்க முடியாது அல்லவா? – என்றார்.

அவ்உரையாற்றிக்கொண்டிருக்கும்போதே ஆளும் தரப்பு உறுப்பினர்கள் இடையூறு விளைவித்தனர். அச்சமயத்தில், தன்னுடைய உரையைகவனமாக கேட்குமாறு கூறியதோடு, அமைதியை பின்பற்றுமாறும் வலியுறுத்தினார்.

அதன் பின்னர் தொடர்ந்து உரையாற்றுகையில், பொருளாதாரத்தினை மையப்படுத்தி ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் முற்று முழுதாக உண்மையானவை. அதனை நாம் எதிர்க்கவில்லை. ஜனாதிபதி எதிரணியில் இருக்கின்றபோது சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டும் என்றார். நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக் வைச் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டை சபையில் சமர்ப்பிகுமாறும் கூறினார். அப்போது நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது, நாட்டைச் சீரழிக்க முடியாது, சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல முடியாது என்றெல்லாம் கூறினீர்கள்.

தற்போதுரணில்ஜனாதிபதியாக இருந்து அத்தனை விடங்களையும் செய்கின்றபோது அதற்கு தலையசைக்கின்றீர்கள். அவர் கூறும் விடயங்கள் அனைத்துக்கும் கை உயர்த்துகின்றீர்கள்.

உங்களுக்கு சர்வதேச நாணய நிதிய உடன்பாடு மட்டுமல்ல எதுவுமே விளங்கவில்லை. ஆகவே கூச்சலிடாது அமருங்கள் – என்றார். (02)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத்தேர்தல் ஆகியவற்றின்போது வாக்களித்த மக்களின் ஆணைக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியபோது, ஆளும் தரப்பில் உள்ள பெரமுனவின் உறுப்பினர்கள் ஆரவாரத்துடன் மேசையில் தட்டி வரவேற்கின்றனர். மகிழ்ச்சியை வெளிப்படுத்துன்றனர்.

ஆளும் தரப்பினரின் இத்தகைய செயற்பாடு எனக்கு வியப்பளிப்பதாக உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கனவுலகத்தையும், நடைமு–றைச் சூழலையும் ஒப்பிட்டுப்பார்க்கும் பட்சத்தில் நடைமுறை முறைமைதான் வெற்றியடையும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது என்றார்.

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, எதிர்வரும் வெள்ளிக்கிழமை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாக்குகளைப் பயன்படுத்தும்

சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியைப் பெற்றுக்கொண்ட பின்னர், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களும், நாடுகளும் இலங்கைக்கு நிதியுதவு வழங்கும்.

கடன் பெறாமல், இந்த நாட்டை மீட்பதாக எவரும் கூறுவார்களாயின், அது, அந்த 69 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி போன்றதாகும். – என்றார். (02)

# சகோதரியின் கணவரை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்த சகோதரர் கைது!



காணித் தகராறு காரணமாக நபர் ஒருவர் தனது மூத்த சகோதரியின் கணவரை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கல்நேவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இலக்கம் 146, ஹெலபதுகம, கல்நேவ பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே (வயது 74) மேற்படி தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஹெலபதுகம பகுதியைச் சேர்ந்த 60 வயது சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர், ஹெலபதுகம பகுதியில் உள்ள நெல்வயல் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த போது குறித்த இடத்துக்குச் சென்ற அவரது மூத்த சகோதரியின் கணவருக்கும் அவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. அதன்போது சந்தேகநபரான சகோதரர் சகோதரியையும் அவரது கணவரையும் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் பலத்த காயத்துக்குள்ளான இருவரும் கல்நேவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சகோதரியின் கணவர் உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (02)

# மனித கடத்தல் வியாபாரிகளிடம் அகப்படாதீர் என்கிறார் மனுஷ



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல்,சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு சென்று பல இன்னல்களை எதிர்கொண்டுள்ள இலங்கை பெண்களை மனிதாபிமான அடிப்படையில் நாட்டுக்கு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித கடத்தல் தரப்பினருக்கு அகப்படாமல் சட்ட வழிமுறைகளுக்கு அமைய வெளிநாடுகளுக்கு செல்லுமாறு பொது மக்களிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரம சிங்க முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

2020 ஆம் ஆண்டு 15640 பெண்களும், 2021 ஆம் ஆண்டு 29314 பெண்களும், 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்த மூன்று காலப்பகுதியில் 39,915 பெண்களும் வீட்டு பணிபெண்களாக மத்திய கிழக்கு உட்பட பெரும்பாலான நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.

இரண்டு வருடகால ஒப்பந்த அடிப்படையில் இலங்கை பணிப்பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்கிறார்கள்.

இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து முறையான வழிமுறைகளுடன் வெளிநாடு செல்லும் பணி பெண்கள் தொடர்பில் பணியகம் முழு பொறுப்பேற்கும்.

சட்டத்துக்கு அமைய வெளிநாடு செல்லுமாறு பல அறிவுறுத்தல்களை விடுத்தாலும் ஒரு தரப்பினர் மனித கடத்தல் வியாபாரிகளிடம் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் மனித கடத்தல் குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல்,சட்டத்துக்கு முரணான வகையில் வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை பெண்களை மனிதாபிமான அடிப்படையில் நாட்டுக்கு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மட்டத்தில் தாதியர் சேவையில் 36 ஆயிரம் மில்லியன் தாதியர்களுக்கான கேள்வி காணப்படுகிறது.

முறையான பயிற்சிகளுடன் இலங்கை தாதியர்களுக்கு உலகளாவிய மட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள இலங்கை மருத்துவம் மற்றும் தாதியர் சங்கத்துடன் பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து பணி பெண்களாக செல்பவர்கள் நாடு திரும்பியவுடன் அவர்களின் நலன் பேணுவதற்கு பிரதேச சபை ஊடாக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை உள்ளடக்கிய வகையில் பொது வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

நாட்டுக்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் பணிபெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி சேவைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத்துக்கு உண்டு.

போலியான ஆசை வார்த்தைகளைக் குறிப்பிடும் மனித கடத்தல் தரப்பினருக்கு அகப்படாமல் சட்ட வழிமுறைகளுக்கு அமைய வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்லுமாறு பொது மக்களிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

சட்டவிரோதமான முறையில் செயற்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# பல ஆண்டுகளுக்கு பின்னர் மலேரியாவால் ஒருவர் சாவு

இலங்கையில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மலேரியாவால் பாதிக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

மாணிக்கக்கல் தொடர்பான வர்த்தக நோக்கத்துக்காக தன்சானியாவுக்குச் சென்று திரும்பிய களுத்துறை பேருவளை சீனன்கோட்டை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் திங்கட்கிழமை தெரிவித்தன.

அவர் ஏப்ரல் 10 ஆம் திகதி அன்று இலங்கைக்குத் திரும்பினார். பின்னர் நான்கு நாள்கள் காய்ச்சலுடன் தனது வீட்டில் இருந்தார். ஏப்ரல் 14 ஆம் திகதி தனியார் வைத்தியாலையில் சேர்க்கப்பட்ட அவர் ஏப்ரல் 15 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் மலேரியா பாதிப்புக்குள்ளான நாடுகளிலிருந்து திரும்பி வருபவர்களை பரிசோதிப்பதற்கான சரியான பரிசோதனை திட்டம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதையல் தோண்டிய நால்வர் கெக்கிராவையில் கைதாகினர்

கெக்கிராவை, இலுகேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பின்னால் புதையல் தோண்டிய நால்வர் கைது செய்யப்பட்டனர் என கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தில் கைதான 24, 31, 42 மற்றும் 43 வயதுடைய இவர்கள் கெக்கிராவை மற்றும் மாத்தளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

புதையல் பெறுவதற்காக வீட்டின் பின்புறத்தில் பாரிய குழி தோண்டப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தில் திருத்தம்

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமானவகையில் 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய சட்ட விரோதமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிலுக்குப் பிரவேசித்துள்ள தரப்பினர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, உப முகவர்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக இணைத்துக் கொள்கின்ற செயன்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் புலம்பெயர் தொழிலாளர்களை ஆபத்துக்குள்ளாக்குகின்ற பாரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் புதிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சூடானில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை விரைவில் பாதுகாப்பாக வெளியேற்றலாம்

## அலிசப்ரி நம்பிக்கை



சூடானில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை அடுத்த சில நாள்களில் பாதுகாப்பாக வெளியேற்ற முடியும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பாக நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். மோதல்களை முடிவிற்கு கொண்டுவருமாறு மோதலில் ஈடுபட்டுள்ளவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுகளுக்கு முன்னுரிமை வழங்குவதே சாத்தியமான நிரந்தரமான தீர்வு எனத் தெரிவித்துள்ள அலி சப்ரி, சூடான் மக்களுக்கு அமைதி, சமாதானம், ஸ்திர தன்மை, முன்னேற்றம் போன்றவை கிட்டவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சூடானில் உள்ள இலங்கையர்களின் நிலைமையை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ள இலங்கையின் வெளி விவகார அமைச்சர் இந்த விடயத்தில் இந்தியா வழங்கிய உதவிகளை பாராட்டுவதாக வும் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஒரு சில நாள்களில் சூடானில் சிக்குப்பட்டுள்ள இலங்கையர்களை பாதுகாப்பாக வெளியேற்ற முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளோம் எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

# எயார்லைன்ஸ் பொறியியல் பிரிவில் 25 வல்லுநர்களுக்கு பற்றாக்குறை



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பொறியியல் பிரிவில் 25 வல்லுநர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் எனவும், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழில் வல்லுநர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமானங்களில் அண்மையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் தொடர்பில் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் உயர்மட்ட முகாமைத்துவம், பொறியியல் திணைக்களம், சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை, விமான நிலையம் மற்றும் விமான சேவைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டது.

விமான நிறுவனத்துக்கு ஒரு விமானம் கூட சொந்தமாக இல்லை என்பதும், இயக்கப்படும் அனைத்து விமானங்களும் பல்வேறு நாடுகளில் இருந்து குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டவை என்பதும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, பொறியியல் துறைக்கு நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்து விமானங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

# யாழில் வயோதிபப் பெண்ணை அறைக்குள் பூட்டிவிட்டு கொள்ளையிட முயன்றவர் கைது!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வயோதிப பெண்மணியை வீட்டின் அறையொன்றினுள் வைத்து பூட்டி விட்டு, வீட்டினுள் சல்லடை போட்டு தேடிய நபர் ஒருவரை ஊரவர்கள் மடக்கி பிடித்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது -

திருநெல்வேலியில் வயோதிப் பெண்மணி வசிக்கும் வீடொன்றினுள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர், வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணை வீட்டினுள் உள்ள அறை ஒன்றினுள் வைத்து பூட்டி விட்டு, வீட்டினுள் சல்லடை போட்டு தேடுதல் நடாத்தியுள்ளார்.

அவ்வேளை அறையினுள் பூட்டப்பட்டு இருந்த பெண்மணி அபாய குரல் எழுப்பவே, அயலவர்கள் வீட்டிற்கு சென்ற போது, வீட்டினுள் இருந்து நபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

அதனை அடுத்து வீட்டினுள் சென்று பார்த்த போது வயோதிப பெண் அறை ஒன்றினுள் வைத்து பூட்டப்பட்டு இருப்பதை அவதானித்து அறையை திறந்து அவரை காப்பாற்றியுள்ளனர்.

அதேவேளை வீட்டில் இருந்த பொருள்கள் கலையப்பட்டு காணப்பட்டன.

அதனை அடுத்து , வீட்டில் இருந்து தப்பி சென்ற நபரை ஊரவர்கள் தேடி மடக்கி பிடித்து விசாரணைகளை மேற்கொண்ட போது , அந்நபரிடம் 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அவரது பையில் , பித்தளை பொருள்கள் சிலவும் காணப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த நபரிடம் தன்னை அடையாளப்படுத்த கூடிய எந்த ஆவணங்களும் இருக்கவில்லை.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கி, பொலிஸாரிடம் அந்நபரை ஒப்படைத்துள்ளனர். அந்நபரை கைது செய்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு பகுதியில் வயோதிபர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்டு , அவர்களின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த சம்பவம் குறித்த வீட்டின் அருகில் வசிக்கும் அயலவர்கள் மத்தியில் மேலும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மோதரையில் சுற்றிவளைக்கப்பட்ட மருந்துகள் உற்பத்தி நிலையம்





கொழும்பு 15, மோதரவில் உள்ள சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி நிலையமொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதன் உரிமையாளரின் வீட்டிலிருந்து மருந்து வகைகள் மற்றும் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டன எனச் சந்தேகிக்கப்படும் மூலப்பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டன என தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் வலி நிவாரணி மாத்திரைகளை தயாரித்துள்ளார் எனவும், இந்திய மருந்து வகைகளுக்கு நிகரான மருந்துகளை அவர் தயாரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிர நடவடிக்கை அவசியம்

இது கடும் கோடை காலம். அதுவும் எல் நினோவின் தாக்கத்தால் இந்தாண்டு கோடை அனல் கக்குகின்றது. இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டில் இதுவரையிலான அதியுயர் வெப்பம் பதிவாகும் என்று காலநிலை அறிவியலாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர். இலங்கையிலும் வெப்ப அலைகளின் தாக்கம் குறித்து சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தியாவில் வெப்ப அலைகளின் தாக்கத்தால் ஏற்கனவே பல உயிரிழந்திருக்கின்றனர். இதிலிருந்து தப்ப வெயிலில் அதிகம் திரிவதைத் தவிர்ப்பதுடன் நிறையத் தண்ணீர் அருந்தவேண்டும் என்றும் சுகாதாரத் துறையால் அறிவுறுத்தப்படுகின்றது.

தூய நீரையே அதிகம் அருந்துமாறு சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தினாலும் வெக்கை அடங்க, தாகத்திற்கு குளிர்பானங்களை அருந்துவதைத்தான் வழக்கமாகக் கொண்டிருக்கின்றோம். அது உடலுக்குப் பாதமானது என்று தெரிந்தபோதும் அதனைச் செய்வதற்கு எவரும் தயங்குவதில்லை. வெள்ளைச் சீனி அதிகம் பயன்படுத்தப்படும் குளிர்பானங்கள் இந்த வெக்கைக் காலத்தில் அதிகம் விற்றுத் தீர்க்கின்றன. தாகம் அடங்கவும் உடல்வெப்பம் குறையவும் குளிர்பானம் அருந்தினால் நல்லது என்றே எண்ணத் தலைப்படுகின்றோம். நுகர்வுப் பண்பாட்டுக்குள் சிக்கிக்கொண்டதால் ஏற் பட்ட சிக்கல்களில் இதுவும் ஒன்று. தேவை, உடல் ஆரோக்கியம் என்பவற்றைத் தாண்டி நாகரிகம் கருதியும் குளிர்பானங்களைக் குடிக்கப் பழகியிருக்கின்றோம்.

இவற்றை மையப்படுத்தி உலகளாவிய பெரும் வர்த்தகம் நிகழ்கிறது. அதுவே பேரழிவு என்கிறபோது, அத்தகைய பெரு வர்த்தகத்தின் நடுவே காலாவதியான குளிர்பானங்களை அந்தத் திகதிகளை மாற்றி அமைத்துப் பின்னர் விற்பனை செய்யும் மிக மோசமான செயல் இன்று யாழ்ப்பாணத்தில் சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் மாட்டியுள்ளது. குளிர்பானப் போத்தல்களில் அச்சிடப்பட்டிருந்த காலாவதித் திகதிகளை மாற்றியும் சிலவற்றில் மாதத்தை உருத் தெரியாமல் சிதைத்தும் காலாவதியான குளிர்பானங்களை விற்றதைக் கண்டுபிடித்த அதிகாரிகள் அதுபோன்று விற்பதற்குத் தயார் நிலையில் இருந்த மேலும் ஆயிரம் குளிர்பானங்களையும் கைப்பற்றியிருக்கீறார்கள்.

தாகத்திற்குத் தண்ணீர் கேட்டால் நஞ்சைக் கொடுக்கும் இத்தகைய பாதகச் செயலில் ஈடுபடுபவர்கள் ஈவிரக்கமின்றித் தண்டிக்கப்படவேண்டும். எந்தவிதத் தயவு தாட்சண்யமும் இன்றி இவர்கள் மீது அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுபோன்ற மிக மோசமான செயல்களுக்கு அதியுச்ச தண்டனை அல்லது தண்டம் பெற்றுக்கொடுக்கப்படுவதன் மூலமே இனியொருவர் இவ்வாறு எண்ணத் தலைப்படுவதைத் தவிர்க்க முடியும்.

இதுபோன்ற மோசடி சந்தையில் தொடர்ந்து நடந்து வருகின்றது; இம்முறை அது கையும்மெய்யுமாகப் பிடிபட்டிருக்கிறது என்று தெரிவித்தார் சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர். அப்படியானால் மிக நீண்ட காலமாகவே பலரும் இப்படி நஞ்சை உணவு என்று கூறி விற்பனை செய்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகளின் தீவிர நடவடிக்கையும் உச்சபட்ச தண்டனையும்தான் உதவ முடியும்.

# வவுனியா கட்டையர்குளத்தில் சட்டவிரோதமாகக் காடழிப்பு

### பொலிஸ்; நடவடிக்கை இல்லை எனக் குற்றச்சாட்டு





வவுனியா, கட்டையர் குளம் பகுதியில் 12 ஏக்கர் காடு சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ள போதும் இது தொடர்பில் பொலிஸாரும், வன திணைக்களத்தினரும் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கட்டையர்குளம் பகுதியில் வன திணைக்களத்துக்குச் சொந்தமான காட்டுப்பகுதி 12 ஏக்கர் கடந்த சில நாள்களாக அழிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் அரச அதிகாரிகள் பலருக்கும் கடந்த சில நாள்களுக்கு முன்னரே மக்கள் முறையிட்டும் குறித்த காடழிப்பு தடுத்து நிறுத்தப்படவில்லை என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மேற்படி பகுதியில் காடழிப்பு மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போது அங்கு சென்ற கிராம மக் கள் அதனை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். இருப்பினும் பொலிஸார் தமது முறைப்பாட்டை பதிவு செய்யவில்லை என கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காடழிப்பு இடம்பெற்ற போது குறித்த பகுதிக்கு தமது பகுதியில் இல்லாத வாகனங்கள் சில வந்து சென்றன எனவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த பகுதியானது வரைபடத்தில் காட்டுப் பகுதியாக காணப்படுகின்ற போதும் எவருடைய அனுமதியும் பெறப்படாது சில அதிகாரிகள் தமது அதிகாரத்தை பயன்படுத்தி காடழிப்பில் ஈடுபடுகின்றார்களா அல்லது காடழிப்புக்கு துணை போகின்றார் களா என கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன், இது தொடர்பில் அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், வனதிணைக்களம் ஆகியோருக் கும் கிராம மக்களால் திங்கட்கிழமை எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹரகட்டா, குடு சலிந்துவின் தகவலில் கண்டுபிடிக்கப்பட்ட 10 துப்பாக்கிகள்

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹரகட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவலின் அடிப்படையில் சுமார் 10 துப்பாக்கிகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்த துப்பாக்கிகள் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

எனினும், அந்த துப்பாக்கிகளை பயன்படுத்தியவர் கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹரகட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் மடகஸ்கரில் கைது செய்யப்பட்டு கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# பொருளாதார நிலைபேற்று வேலைத்திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 35கோடி டொலர் கடன்

பொருளாதார நிலைபேற்று வேலைத்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட விசேட கடன் வசதியைப் பெற் றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிவசதிகளுக்கு இணையாக இலங்கையின் நிலைபேற்றுத் தன்மை மற்றும் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் 35 கோடி டொலர்கள் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட விசேட கடன்வசதி மற்றும் 1.5 மில்லியன் டொலர்கள் தொழிநுட்ப உதவித் தொகையை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வரகாப்பொல தபால் நிலையத்தில் முத்திரைகள் மற்றும் பணம் திருட்டு

வரகாப்பொல பிரதான தபால் நிலையத்தில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் மற்றும் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாரோ ஒருவர் ஜன்னலை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 1,70,000 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் சுமார் 9 லட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தபால் அதிபர் திங்கட்கிழமை வரகாப்பொல பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# துடுப்பாட்டமும், சதுரங்கமும்

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் கடினப்பந்துத் துடுப்பாட்டம் மற்றும் சதுரங்கப் போட்டிகள் ஏப்ரல் 29 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி முதல் மட்டுவில் சந் திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வட மகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்–குயின்ரஸ் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் ந.சர்வேஸ்வரன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தென்மராட்சி அபிவிருத்திக் கழக ஐக்கிய இராச்சிய நிதியத்தின் உறுப்பினர் வெற்றிவேலு அசோகன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் சர்வதேச விளையாட்டு இணைப்பாளர் ம.சிறீதாசன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் வி.சுதர்சன் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பொருளாளர் லயன். வ. ரீபிரகாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.



# மின்னல் தாக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் ஹப்புத்தளை வைத்தியசாலையில்

ஹப்புத்தளை பகுதியில் பெய்த அடை மழையுடன் ஏற்பட்ட மின்னல் தாக்கியதில் அதிர்ச்சியடைந்த தம்பேதன்ன மஹகந்த பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் ஹப்புத்தளை பங்கெட்டிய மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் மூவரும் வீட்டிலிருந்தபோதே மின்னல் தாக்கியதில் அதிர்ச்சியடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

42, 21 மற்றும் 17 வயதுடைய மூவரே மின்னல் தாக்கத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.